செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௫ — திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௧, கார்த்திகை — திசம்பர், 1950 — பரல் ௪

'சித்தாந்த வித்தகர்' மணிவிழா

[சித்தாந்த பண்டிதர், புலவர், ப. இராமநாத பிள்ளை.]

'ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்' என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர்கள் ஆசிரியர், திரு. வீ. குமாரவேலுப் பிள்ளையவர்கள் ஆவார்கள். பொருநையாறு சந்தனமணமும் தென்றற்காற்றும் தீந்தமிழ்ச்சுவையும் தன்பால் ஒருங்குமருவ என்றும் பொன்றாக் குலக்கொடியாய் நின்று நிலவி வளப்படுத்தும் நெல்லைமாவட்டத்துப், படை வீடு ஆறனுள் இரண்டாவதாகத் திகழும் 'திருச்சீரலைவாய்' என்னும் திருச்செந்தூரின் அண்மையில் தென்பால் எட்டுக்கல் தொலைவிலுள்ளது குலசேகரன்பட்டினம். இது இரண்டுபாலும் கடலாலும் மற்றிரண்டுபாலும் மணலாலும் சூழப்பெற்று நெய்தல் நிலம் சார்ந்த திருவூர்.

இவ்வூர், முன்னாளில் பெருங்கடற்றுறைப் பட்டினமாக விருந்தது. பின்னாளிலும் ஓரளவுக்குச் சிறந்த துறைமுகமாகவே இருந்தது இப்பொழுது தோணிகள் வந்துபோகும் துறைமுகமாகத் துலங்குகின்றது. இவ்வூர் உடல்நலமுடன் வாழ்வதற்கு உகந்தது. பழமையும் புதுமையும் கிழமைகொண்டாடிப் பழமைப் பண்பாடகலா வளமை வாய்ந்தது. நீர்நலக் கேட்டாலும், போக்கும் வரத்தும் உறையுளும் அளவின்றி யிருப்பதாலும், ஒவ்வா உணவு செயலுடையார் நீக்கமுடியாத நிலைமையில் அடுத்தடுத்து உடன்கலந்து உறைவதாலும் ஏற்படும் கொடு நோயும் ஒட்டு நோயும் வர வாய்ப்பில்லாத நலம் பொருந்தியது.

அம்மை, முப்பானிரண்டறம் எப்பாலும் வளர்த்து இன்னருள் செய்த எழில் நினைவாம் காஞ்சியும், அப்பன், ஐம்பெருங்

கூத்தை ஆருயிர்ப்பொருட்டு எப்பொழுதும் இயற்றி ஒப்பிலா அருள் செய்யும் ஒண்தினைவாம் செப்பற்கரிய தில்லையும் வைப்பாயமைந்ததுபோல், முறையே வடபாலும் தென்பாலும் இருபெருந் திருக்கோவில்கள் அமைய இவற்றுக்கு நாப்பண் நன்மக்கள் வாழும் நலம் அமைந்தது இவ்வூர்; சாலச் சிறந்த வேளாண் மாந்தர் பெருக வாழ்வது இவ்வூர்; தொன்றுதொட்டுப் புலமையும், புலனடக்கமும், புண்ணியப் புரிவும் மிக்குள்ளார் பலர் வாழ்ந்து வந்ததும் வருவதுமாகிய வாய்மை நிறைந்த திவ்வூர்; மெய்யடியார்கட்கு எய்ப்பில் வைப்பாய் இலங்குவது இவ்வூர்; "கரவாது கைசெய்தூண் மாலையவர்" பலர் பகுத்துண்டு வாழும் பண்புடையதிவ்வூர்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த இவ்வூரின்கண் தொன்மைநலங் குன்றா வேளாண் குலத்து நன்னாள் பொலியத் திருவருள் வலத்தால் தோன்றியவர் நம் **ஆசிரியர், 'சித்தாந்த வித்தகர்' திரு. வீ. குமாரவேலுப் பிள்ளை**யவர்கள். அவர்களின் தந்தையார் திருப்பெயர் வீரகுமாரசாமிப் பிள்ளை; தாயர் திருப்பெயர் சூரியவடிவம்மையார். இருவரும் செந்நெறிச் செல்வர்; ஈவு இரக்கம் வாய்ந்தவர்; நாவியன் மொழியும் நன்கினிமைவாய்ப்ப மொழிபவர்; நோன்பு பல நோற்கும் நோன்மையர்; அடியாரிணக்கம் முடியக்கொண்டவர்; படியின்மிசை எடுத்துக்காட்டாம் பான்மையர்.

இளமையில் உள்ளூரினும் வெளியூரினும் தமிழாங்கிலங்கள் முறையுறக் கற்றுச் சிறந்தனர். சூழ்நிலைக்கேற்றவாறு அடக்கமும் அறிவும் அன்பும் துறவுள்ளமும் நிறைவும் உறலாயின. அதனால், கைத்தொழில் வேட்கையும் எழுந்தது. நூற்றலும் நெய்தலும் ஏற்றமுற ஆற்றினர். ஆணமிக மாணவர்க்குப் போதிப்பதே அருந்தொண்டெனக் கொண்டாற்றினர். 'பண்டாரச் சிவன் ஞாபகப் பள்ளிக்கூடம்' என்னும் கல்லூரியில் நல்லாசிரியராக நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இருந்து முயன்று தொண்டு புரிந்தனர். உடனுழைக்கும் ஆசிரியர்களும், தலைவர்களும் தனிமதிப்புக்கொள்ளும்படியான நிலைமையில் பணியாற்றி வந்தனர்.

மாணவர்கள் மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் மிக்கவராய்க் கல்வி பயிலுமாறு அன்பும் முறுவலும், அகமும் முகமும் மலர இன்புறுத்தும் இன்னுரையுங்கொண்டு இடையிடையே கதைவழி யூக்கியும் கற்பிப்பர். இல்லற வாழ்க்கையை 'வையத்து வாழ் வாங்கு வாழ்ந்து' நல்லறமாக நன்காற்றுபவர். பொருள்களை நுண்ணிதாய் எளிதிற் காணும் கூர்மையும், கண்டவற்றை என்றும் மறவாச் சீர்மையும், ஆற்றும் மாண்பும் வாய்ந்தவர்.

நாட்டுப்புறத்தில் நாட்டும் நற்றொண்டே நகர்ப்புறத்தும், ஊர்ப்புறத்தும், உலகத்தும் நிலவி உய்வினைத் தருமென்னும் பெருநோக்கு உடையவர்; அதற்கேற்றவாறு உள்ளூரிலேயே கிழமைதோறும் மாணவரும் பிறரும் தற்சூழச் செழுந்தமிழ் மறையாம் திருமுறை ஓதித் திருக்கோவில் வழிபாடு செய்வித்தும் செய்தும் வரும் செம்மையர்; செம்பொருட் பெருநூலாம் சித்தாந்தத் திருமுறைகளை இருபாலார்க்கும் உளங்கொளுமாறு ஒல்லும் வகை ஓவாது கற்பித்துவரும் உண்மையர்; அம்மட்டோ கற்பித்தவற்றைக் கற்பார் மறவாது கைக்கொண்டு ஒழுகி உய்யும்படி தெளிந்த எளிய இனிய நடையில் சிறு சிறு வெளியீடுகளாக எழுதியும் மெய்த்தொண்டு புரிபவர்.

'புறச்சமய நெறி நின்று அகச்சமயம்புக்க' புண்ணியர் போன்று சைவசித்தாந்தத்து அழுந்திய அறிவு பெற்ற துணிவினர். மெய்யடியார்கள்போன்று இல்லறத்தினின்று இறைவழிபாடும், முறையோதுதலும், அன்பும் அறனும், அருளும் கடமையும் பொருளுறப்பெற்று உய்ய ஒழுகிவருஞ் சீலத்தர்.

இவர்கட்கு அம்மையப்பர் திருவருளால் அகவை அறுபது நிறைவுற்று திருவள்ளுவர் ஆண்டு, கசுஅக-கார்த்திகைத் திங்கள் கக-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (26-11-1950) பண்டாரச் சிவன் ஞாபகப் பள்ளிக்கூட மண்டபத்தின்கண் '**மணிவிழா**'ச் சிறப்புற நிகழ்ந்தது. தூத்துக்குடிச் 'சித்தாந்தப் பேராசிரியர்' திரு. ந சிவகுருநாத பிள்ளையவர்கள் தலைமை பூண்டார்கள். ஆசிரியரவர்களால் அரிதாய்ந்து அமைத்த 'விறுவெண்பா ஆராய்ச்சியும், ஐந்தெழுத்துண்மையும், திருவாதிரை விளக்கமும்' அடங்கிய வெளியீடு **நினைவுமலராக** வெளியிடப்பெற்றது. ஆசிரியரவர்களின் படத்திறப்பும், அன்னார்க்கு அன்புடன் வழங்கிய ஆயிரத்தொன்றடங்கிய வெண்பொன் முடிப்பும், திருவாவடுதுறைத் திருமடமுதல்வர் சிறப்புற வழங்கிய பொன்னும் பட்டுப்போற்று வெளியீடுகளும் புலவர் பலர் பாராட்டுரையும், ஆசிரியரின் மாணவன், திரு. மு. அறம்வளர்த்தான் அமெரிக்காவிலிருந்து விடுத்த உரைமாலையும், வாழ்த்தும், பிறவும் பெட்புற நிகழ்ந்தன.

ஆசிரியர்கள் திருவருளால் நலமுடன் நீடுவாழ்ந்து, செந்தமிழ்ப் பணியும் செந்நெறித் தொண்டும் செழிப்புறச் செய்து, பன்னாளும் யாத்து, பயன்பெறுவித்தும் பயன்பெற்றும் ஓங்க அம்பலவாணர் அடியிணையை வேண்டுகின்றோம்.

வாழ்க.

இந்தி நல்லெண்ணத் தூதுக் குழு

[இனியன்]

அனைத்திந்திய இந்தி சாகித்ய சம்மேளனம் தென் இந்தியாவிற்கு ஓர் நல்லெண்ணத் தூதுக் குழுவை அனுப்பியுள்ளது. அக்குழு அக்டோபர்த் திங்கள் 5-ஆம் நாளிலிருந்து சென்னையில் தங்கித் தன் அலுவலைத் துவங்கியுள்ளது.

அக் குழுவில் (௧) பண்டித சந்திரபாலிப் பாண்டேயா, இந்தி சாகித்ய சம்மேளனத் தலைவர்; (௨) புகழ் மிக்க காங்கிரசுத் தலைவர், திரு. பாபாராகவ தாஸ், (எம். எல். ஏ.); (௩) காசி நாகரி பிரசாரிணி சபா நிறுவியவரும் கல்வி வல்லுநருமான பண்டித ராம்ராயன் மிஸ்ரா; (௪) டில்லி, அரிசன உத்தியோக சாலா டைரக்டரான, திரு. வியோகிஹரி; (௫) இலட்சுமணபுரி மகளிர் கல்லூரி பிரின்சிபால், திரு. காஞ்சனலதா சபர்வால்; (௬) மைசூர் பல்கலைக்கழக இந்தித் துறைத் தலைவர், புரபசர், என். நாகப்பா ஆகிய அறுவரும் இக்குழுவில் இருப்பவர்கள் என அறிவிக்கப்பெற்றுள்ளது.

அறிவித்தவாறே அக்குழுவினர் அக்டோபர்த் திங்கள் ௭-ஆம் நாள் சென்னை மாநில முதலமைச்சர், திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்களை, அவர் உறையுளில் (அடையாற்றில்) கண்டுரையாடினர். அதன்பின், தென்னிந்திய பத்திரிகையாளர் சம்மேளனக் காரியாலயத்தில், நகர பத்திரிகையாளர் சிலரை இந்தி நல்லெண்ணத் தூதுக்குழுவினர் இன்று கண்டனர்.

நல்லெண்ணக் குழுவின் சார்பில்பேசிய திருமாட்டி காஞ்சனலதா சபர்வால் என்பார், இந்தியாவின் பொது மொழியாக இந்தி மொழியை ஆக்கி இந்திய கலாசாரத்திடையே ஒற்றுமையை உண்டாக்குவதே தம் குழுவின் நோக்கம் என்று எடுத்துரைத்தார். தாம் இங்குவந்து கண்டதிலிருந்து இங்கு மிக எதிர்ப்பு இல்லை யென்பதை அறிந்திருப்பதாகவும் குறிப்பிட்டார். குழுவின் நோக்கத்தை வெளியிட்டுக் குழுவினரை ஊக்கியதற்காகப் பத்திரிகையாளர்க்குப் பண்டித ஸ்ரீராம் சதுர்வேதி யென்பார் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டார். "சென்ற இருநூறு ஆண்டுகளாகத் தென்னிந்தியருடன் வட இந்தியர் மிகுதியாகக் கலைப்பண்புத் தொடர் வைத்துக் கொள்ளவில்லை. அறிஞர்களுடன் தூதுக்குழுவினர் நடத்திய உரையாடல்களினின்று தென்னிந்தியாவிற்கும் வட இந்தியாவிற்கும் இடையிலுள்ள பல கலைப் பண்புத் தொடர்புகள் வெளியாயின. இந்தியைப் பொதுமொழி ஆக்குவதன்மூலமே கலைப்பண்புத் தொடர்பை மீண்டும் இருநாடுகட்கிடையே

ஒற்றுமைப்படுத்த முடியும். அதுவே தற்போது செய்ய வேண்டிய முதற்கடமையாகும்,'' என்றார்.

"நாட்டின் தேசியமொழியாக இந்திமொழி ஒப்புக் கொள்ளப்பட்டாலும் எவரும், சிறப்பாகத் தென்னிந்தியர் யாவரும் ஆங்கிலம் முன்னிருந்த இடத்தைப் பதினைந்து ஆண்டு களுக்குள் இந்தி கைப்பற்றுவதை ஒப்புக்கொள்ளமாட்டார் கள். எல்லா வுலகப் பொதுமொழியாக விளங்கும் ஆங்கிலத்தின் மதிப்பை அவர்கள் இழக்கமாட்டார்கள்,'' என்றும் ஒரு பத்திரி கைச் செய்தியாளர் குறிப்பிட்டார்.

காரைக்குடி இந்தி பிரேமமண்டலின் ஆதரவில் எஸ். எம். எஸ். உயர்நிலைப் பள்ளியில் நிகழ்ந்த பட்டமளிப்பு விழாவின்போது ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் கூறிய தாவது:

"சென்னைமாகாண மக்கள் தங்கள் செயலைச் சரிவரச் செய்யவேண்டுமாயின் அவர்கள் இந்தியில் நல்ல அறிவு பெற வேண்டுவது இன்றியமையாதது. ஏனெனின், அம்மொழியே இந்திய ஒற்றுமை அரசியல் அலுவல் மொழியாகப் பதினைந்து ஆண்டுகளுக்குள் மாற்றப்பட இருக்கிறது. தமிழர் வணிகம் பெருக—பிற மாகாணங்களுடன் தொடர்புகொள்ள—இந்தியை அவர்கள் கற்கவேண்டுவது முதன்மை,'' என்பதாகும்.

பின் இந்தி நல்லெண்ணக் குழுவினர் இந்தி எதிர்ப்புத் தலைவர்களுள் ஒருவரான, திரு. சி. என். அண்ணாத்துரை அவர் களைக் கண்டு ஒரு மணி நேரம் உரையாடினர். அதற்கு அவர், கீழ்த்தர வகுப்புக்களில் இந்தி கட்டாய பாடம் ஆக்கப்படு வதையே தாம் கண்டிப்பதாகவும், திராவிட நாட்டில் தாய் மொழியே உள்நாட்டு அலுவல்மொழியாகவும், ஆங்கிலமே அயல் நாட்டு அலுவல் மொழியாகவும் இருக்கப்போவதால் இந்தி மொழி வேண்டுவது முதன்மை இல்லையென்றும், பிற மொழி களைப்போல இந்தியும் கட்டாயம் ஆக்கப்படாமல் கற்பிக்கச் செய்யப்படுமானால் தமக்கு யாதொரு மாறுபாடும் இல்லை யென்றும் எடுத்துரைத்தார்.

சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் சென்னைத் தமிழ்ச் சங்கத்தாரால் இந்தி நல்லெண்ணத் தூதுக் குழுவினருக்கு வரவேற்பு இதழ் படித்தளிக்கப்பட்டபோது, அக்குழுவினருள் ஒருவரான பண்டித ராம் நாராயண மிஸ்ரா என்பவர், "விரும் பாத மக்களின்மீது இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கவேண்டு மென்பதோ, அவ்வந்நாட்டு மொழிகளுக்கு ஊறு விளைவிக்க வேண்டுமென்பதோ இந்தி மொழியாளரின் எண்ணமல்ல,'' வென்று உறுதி கூறினார்.

திரு. கிருஷ்ணசாமி பாரதியவர்கள் தமிழ் மிகப் பழங்கால மொழியென்றும், அதன் பண்பாட்டைக் குலைக்கக்கூடிய எச் செயலையும் செய்ய முடியாதென்றும் தம் எண்ணத்தை எடுத்துரைத்தார்.

தூதுக் குழுவினரைச் சங்கத்தின் சார்பில் வரவேற்றுப் பேசிய திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் கூறிய போது, "உரிய காலத்தில் தூதுக் குழுவினர் சென்னைக்கு வந்தனர். மேற்கு நாடுகளிலோ கிழக்கு நாடுகளிலோ வழங்கும் பிற மொழிகளுடன் தமிழ்மொழியை ஒப்பிட்டுப் பார்க்கும் போது அதன் பெருமை விளங்கும். தமிழ் வழக்காறற்ற மொழியல்ல; வழக்கில் மக்களால் பேசப்படும் மொழியாகும். தமிழின் பெருமைக்குத் திருவள்ளுவரே சான்று. சிறந்த இரு தத்துவ ஞானிகளான இராமானுசரும் சங்கராச்சாரியரும் தமிழர்களே. இந்திய கலைப்பண்பிற்குத் தமிழ்மொழி தன் கடமையைச் செய்திருக்கிறது; இன்னும் செய்யும். அரசினர் குறிப்பிட்டிருக்கும் குறைந்தகால வரையறையான பதினைந்து ஆண்டுகளுக்குள் இந்தியை அரசியல் மொழியாகக் கொண்டுவர இந்திமொழியாளர் பெரிதும் முயற்சி செய்துவருவதாகத் தமிழர் அஞ்சுகின்றனர். பாடங்களைக் கற்பிக்கும் மொழி உள் நாட்டு மொழியாகவே இருக்கவேண்டும். அனைத்திந்திய அலுவலுக்கு இந்தியைப் பயன்படுத்திக்கொண்டபோதிலும், உள்நாட்டு அலுவல் நன்குநடைபெற அவ்வந்நாட்டு மொழியே முதன்மையானது. இந்தி கட்டாயபாடமாக்கப் பெற்றுக் கற்பிக்கப்படுவதைத் தமிழர் வெறுக்கின்றனரேயன்றி வேறு காரணத்தால் அல்ல. தமிழர்மீதும், அவர் மொழி, கலைப்பண்புமீதும் தக்க மதிப்பை வட இந்தியர் காட்டவேண்டும்," என்றார்.

திரு. ரா. பி. சேதுப்பிள்ளை பேசியதாவது: "தமிழ் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன் தோன்றி இரு வழக்கிலும் பயின்றுவரும் மொழி, இன்றியமையாத இடங்களில் தன் சிறந்த ஒலியமைதிக் கேற்றவாறு செம்மைப்படுத்திப் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்வதில் என்றும் பின்னடைந்ததின்று. மேலும், அவ்வாறே இயங்கும். தமிழில் பெரும்பாலோர் இராமாயணம் துளசிதாசர் முதலியோரை உணர்ந்திருப்பதுபோல் எத்தனை வட இந்தியர் வள்ளுவர்குறளையும், கம்பநாட்டாழ்வாரின் இராம காதையையும் அறிந்திருக்கிறார்கள்?"

திரு. லெ. கிருஷ்ணசாமிபாரதி, சங்கத்தின் சார்பில் கூறியதாவது:—தமிழர் இந்திப் படிப்புக்கு எதிர்ப்பாளரல்லர். அகில இந்திய அலுவல்களில் கலந்துகொள்ள இந்தி இன்றியமையாததாகும். இந்தி கட்டாய பாடமாக்கக் கூடாதென்பதே தமிழர்

எண்ணம். சென்னை அரசினர் இந்தியைக் கட்டாய பாட மாக்காமல் விருப்பப் பாடமாக்கியது பாராட்டத்தக்கதே.

"தமிழ் மொழியையோ, அல்லது வேறெம்மொழியையோ அடக்கிவைக்கவோ, அதனிடத்தை நேர்மையற்ற முறையில் கைப்பற்றவோ இந்தி மொழி பேசுவோரின் எண்ணமன்று," எனத், தென்னிந்தியர்க்குப் பண்டிட் ராம் நாராயண் மிஸ்ரா உறுதியளித்தார்.

உடலுக்குயிர்போல் உலகுக்கு உயிராய்த் திகழ்ந்து அவ்வுலக மக்களை வளம்பெற ஒற்றுமையும் உரனும் திறனும் அறிவும் உடையராய் வாழச்செய்வது மொழியேயாம். ஒவ்வொருவரும் தத்தம் தாய்மொழியினை உயிரினும் சிறந்ததாக்கொண்டு ஒழுகுவது யாண்டும் எஞ்ஞான்றுங் காணும் மாறா உண்மையாம்.

அம்முறையில் தொன்மைத் தமிழ்நாடும் தன் தாய் மொழியாம் நன்மைத் தமிழ் மொழியினை உயிரினும் சிறப்பாகக் கொண்டு ஒழுகிவருகின்றது—வரும். இம்முறையிலேயே தமிழ்நாட்டு நல்லறிஞர், பேராசிரியர், பெரும்புலவர், பெருஞ்செல்வர், பெருந்தலைவர், பெருங்கழகத்தார் பலரும் 'இந்தி நல்லெண்ணத் தூதுக் குழுவினர்' முன் தத்தங் கருத்துக்களை நடுநிலை வழாமல் முறையுறக்கிளந்து முடித்தமை முன் மொழிந்த குறிப்புக்களால் நன்குணரலாம்.

அவ்வந்நாட்டு மொழிவழியாக ஆட்சி நிகழ்வதே அவ்வந்நாட்டு மொழியை உயிருடன் வாழச் செய்வதும், அந்நாட்டு மக்களை உரமும், ஒற்றுமையும், ஊக்கமும், ஆக்கமும், ஒழுக்கமும் உடையராய் ஓங்கி வாழச் செய்வதுமாம் என்னும் உண்மையைக் காங்கிரசு என்னும் மாபெருங் கழகத்தார் கண்டு கைக்கொண்டு விரிவுரையாற்றித் தங் கொள்கையைப் பரப்பி ஒற்றுமையுண்டாக்கி வெற்றிகொண்டு விடுதலைபெற்று வீறுடன் திகழ்ந்து வீற்றிருக்கும் உண்மை யுணர்த்தும். ஆங்கிலேயர் ஆங்கிலத்தால் நாட்டுமொழியை அழித்தனர். நாட்டுமொழிப் பற்று அகலவே உயிரற்ற உடல்போல் செயலற்று உரமற்றுப் பிளவுற்று வாழ்ந்தனர் என்பது நேரிற் கண்ட வுண்மை. ஆகவே, என்றும் நாட்டு மொழியே ஆட்சி மொழியாகவும், கல்லூரியில் பயிற்று மொழியாகவும், போக்குவரத்து அஞ்சல் புகைவண்டி வானூர்தி முதலியவற்றின் தலைப்பில் பொறித்துப் புழங்கு மொழியாகவும் இருத்தல்வேண்டும்.

தமிழ்மொழியை ஆட்சி மொழியாகத் திருச்சிராப்பள்ளியில் தொடங்கி நடத்திப் பார்த்தோம்; செம்மையாக நடைபெற

வில்லையென்று கூறப்படுகின்றது. இது வியப்பைத் தருவதாகும். என்னை? வித்தூன்றினால் விளைவறுக்கலாம் வேறொன்றும் செய்யவேண்டுவதில்லை என்று எண்ணும் வேண்டா எண்ணமேயாம். வழங்குந் தமிழ் மொழியிலேயே ஆட்சி வாய்க்கவில்லையென்றால், வழங்குவிக்கப்போகும் இந்தியில் ஆட்சி எங்ஙனம் நிகழும்?

தமிழும் ஆங்கிலமும் துறைபோகக்கற்று, நல்லெண்ணமும், நடுநிலையும், வாய்மையும், தூய்மையும், நாடும் மொழியும் உடலும் உயிருமாய் இயங்கும் ஒண்மையும் கைவந்த தக்கார் பலரைக் காப்புக் குழுவினராய் அமைத்து, முறை மன்றம், ஊராண்மை, நகராண்மைக் கல்லூரி முதலியவற்றில் இயங்க வேண்டிய எல்லா முறைகளுக்கும் ஏற்றவாறு தமிழமைத்து, தமிழ்மொழியையே யாண்டும் வழங்கிவருமாறு செய்ய வேண்டுவது அரசியலாரின் முதற்பெருங் கடமையாகும். அரசியல் அலுவலாளர்கள் அடிதொட்டு முடிவரையும் முன் ஆங்கிலத்தில் பெற்றிருந்தது போன்ற தெளிந்த அறிவு எல்லாத்துறைகளிலும் தமிழில் பெற்றிருத்தல்வேண்டும் என்னும் ஆணை பிறப்பித்தல்வேண்டும். அதுவே அவர்கட்குச் சிறப்புத் தகுதியாகவும் கொள்ளப்படுதல்வேண்டும். அப்பொழுது தமிழில் ஆட்சி செம்மையாக நடக்கின்றதென்பதனை அங்கை நெல்லியென அகத்தும் புறத்தும் ஒத்துக் காண்பர்.

இந்திமொழி மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்குங் கொண்டுள்ள இன்றியமையாத் தொடர்புகளுக்கே கையாளப் படவேண்டும். இதுவே முறைமையும் வாய்மையும் அறமுமாகும் சட்ட நூல் முதலிய எல்லா நூல்களும் தமிழிலேயே இருக்கவேண்டும்.

கல்லூரிகளில் இந்தியை விருப்பப் பாடமாக வைப்பது ஏற்புடையதாகும். கட்டாய பாடமாக வைப்பது, தமிழ் மொழியின் ஆக்கத்துக்கு முன் ஆங்கிலம் செய்ததுபோல் அழிவே செய்வதாகும். கல்வி நிலையங்களில் முதலிடம் தமிழ் மொழிக்கும், இரண்டாமிடம் இந்திக்கும், மூன்றாமிடம் ஆங்கிலத்துக்கும் தந்து, நாட்டையும், மொழியையும், மக்களையும், ஆட்சியையும், வளம்படுத்தி நலம்பெறச் செய்யுங் கடமையையே நாடு எதிர்பார்க்கின்றது. அரசியலார் விழிப்பாயிருந்து விழுப் பொருள் பயக்கும் இச்சீரிய செயலைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஐந்திறம்

[கணியர், டாக்டர், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை]

பூவுலகத்தில் முதன் முதலாக மக்கள் தோன்றிய இடம் தமிழகமே. அதன் எல்லை வடக்கே வேங்கட மலையும் தெற்கே குமரியாறும் என்பது பழைய நூல்களிலிருந்து விளங்குகிறது. முதன்முதலாக மக்கள் பேசிய மொழி தமிழ். தமிழ்மக்கள் ஆராய்ந்து ஆராய்ந்து பல கலைகளையும் வளர்த்தார்கள். கன்னியா குமரிக்குத் தெற்கேயிருந்த பெரும் பரப்பினதாகிய தமிழகம் கடல் கொள்ளப்பட்டது. அப்போது வடக்கே இமயமலைப் பகுதி, சீனம் முதலிய நிலங்கள் வெளிக்கிளம்பின. தமிழ் மக்கள் பல்கிப் பூமியின் பிற நிலப்பகுதிகளுக்குச்சென்று வாழ லுற்றார். அப்போது அவரவர் தங்கிய இடங்களின் தட்பவெப்ப நிலைக்கேற்ப அவர்களின் நடை, உடை, பேச்சு இவை மாறுபடு வனவாயின. "உடுப்பது நான்கு முழம்" என்ற தமிழன் குளிர் நாடு சென்று உடலெல்லாம் துணியால் மூடி வாழத்தொடங்கி னான். இங்ஙனமாக, தமிழகமே மக்களுக்குப் பிறப்பிடம் என்ப தும், தமிழரே உலக முதன் மக்கள், அவர்களின் வழியில் விரிந் தவரே உலகமக்கள் என்பதும், தமிழ்மொழியே உலகத் தாய் மொழி, அதிலிருந்து பிற மொழிகளெல்லாம் கிளைத்தன என் பதும் உலக அறிஞர் யாவரும் ஒப்புக்கொண்ட உண்மைகள்.

தமிழ்மக்கள் அறிந்து அடிப்படைகோலி வளர்க்காத கலையே கிடையாது. சிறப்பாக வானநூற் கலையில் அவர்கள் அளித்த பிச்சையே இன்று உலக மக்களால் ஆராயப்பெற்று வளர்க்கப்பெறுகிறது. படிப்பின்மையாலும், உண்மை உண ராமையாலும், ஆராய்ச்சிக் குறைவினாலும், பண்டைநூல்கள் அழிந்தும் அழிக்கப்பட்டும் போயினமையாலும், இன்று தமிழில் வானூல் என்பது ஒன்று உண்டோ எனத் தமிழர் தலைவரும் ஐயுறும நிலைமை வந்துவிட்டது. ஆதலின் உண்மையை நிலைநாட்ட விரிவானதொரு நூல் வெளிவருதல்வேண்டும்; அதனிடையில் இங்கே இன்றைக்கு இன்றியமையாதன சில குறிப்போம்.

வானத்திலே விண்மீன் (நட்சத்திரம்) களும், கோள் (கிரகங்) களும் நம்மைச் சுற்றிச்சுற்றி வருவதை நாம் காண்கின்றோம். விண்ணிலே காணப்படும் மீன்கள் எண்ணில்லாதன; அவைக ளெல்லாவற்றுக்கும் பெயர்கள் கிடையா. விட்டு விட்டு மின்னு வன மீன்கள். மின்னாது எப்போதும் ஒன்றுபோல ஒளிருவன கோள்கள். கோள்கள் ஒன்பது; அவை ஞாயிறு (சூரியன்), திங்கள் (சந்திரன்), செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இருள் (இராகு), கொடி(கேது) என்பன. இருளும் கொடியும்

இராக்கோள்கள். அதாவது இராத கோள்கள். அவை உண்மையில் நிழல்கள்தாம்; ஞாயிறு முதலிய முதல் ஏழு கோள்களைக் குறிக்கத் தனித்தமிழ்ச் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ஆறு, ஏழு இருக்கின்றன. கோள்களுக்கெல்லாம் முதன்மை பெற்றிருப்பது ஞாயிறு; அதனால் அது 'கோளரசு' என்று வழங்கப்பெறுகிறது. மற்றைய கோள்களெல்லாம் இதனிடமிருந்தே தோன்றின. ஆதலினாலே ஞாயிற்றுக்கிழமையே முதற்கிழமையாக, ஏனைய திங்கள் முதலிய ஆறு கிழமைகளும் இதன் பின்னரே எண்ணப்பெறுகின்றன. திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய ஆறு கோள்களும் தங்களுக்கென இயற்கையான ஒளி இல்லாதவைகளாய் ஞாயிற்றினுடைய ஒளியினாலேயே ஒளிபெற்று விளங்குகின்றன.

ஞாயிறு முதலிய கோள்கள் விண்ணில் நம்மைச் சுற்றி வருகின்றன. அவ்வழி வான்வழி, ஞாயிற்றுவழியெனவும் பெயர் பெறும். அவ்வழி ஒரு வட்டமாக இருக்கிறது இவ்வட்டத்தில் கோள்கள் நிற்கும் நிலைகளை அளந்தறிவதற்கு இருபத்தேழு நிலைகள் குறிக்கப்பட்டுள்ளன. இந்நிலைகள் அவ்வழியிலுள்ள நிலையான விண்மீன்களை அடையாளமாகக்கொண்டு அறியப்படுவன. அவைகளும் அவைகளைக் குறிக்கும் சுருக்கெழுத்துக்களும் பின்வருவன:—

1. ஐப்பசி (அசுவதி) - ஐப்
2. அடுப்பு (பரணி) - அடு
3. கார்த்திகை - கார்
4. ஊற்றால் (உரோகிணி) - ஊற்
5. மார்கழி (மிருகசீரிடம்) - மார்
6. திருவாதிரை - திருவா
7. தை (பூசம்) - தை
8. புணர்தை (புணர்பூசம்) - புணர்
9. ஆயில் (ஆயிலியம்) - ஆயி
10. மாசி (மகம்) - மா
11. கணை (பூரம்) - கணை
12. பங்குனி (உத்திரம்) - பங்
13. கை (அத்தம்) - கை
14. சித்திரை - சித்
15. விளக்கு (சோதி) - விள
16. வைகாசி (விசாகம்) - வை
17. பனை (அனுடம்) - பனை
18. கேட்டை - கேட்
19. ஆனி (மூலம்) - ஆனி
20. உடைகுளம் (பூராடம்) - உடை
21. ஆடி (உத்திராடம்) - ஆடி
22. திருவோணம் - திருவோ
23. ஆவணி (அவிட்டம்) - ஆவ
24. செக்கு (சதயம்) - செக்
25. புரட்டாசி (பூரட்டாதி) - புரட்
26. பிற்கால் (உத்திரட்டா) - பிற்
27. தோணி (இரேவதி) - தோ

என்பன. இவைகளில் தையும் புணர்தையும் பெயர்மாறியுள்ளன இந்நாள் உலக வழக்கில். இவை நாள் என்றும், நாள்மீன் என்றும் பெயர்பெறும். இவைகளைக் குறிக்கத் தனித்தமிழ்ச்சொற்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று முதல் ஆறுவரை உள்ளன.

இங்ஙனம் இருபத்தேழு நிலையங்களையுடைய விண்வட்டம் தம்முள் இரண்டேகால், இரண்டேகால் நாள்மீன்களை உள்

ளடக்கிய பன்னிரண்டு பெரும்பகுதிகளாகவும் பிரித்தறியப்படு கின்றது. இப்பன்னிரண்டு பெரும் பிரிவுகளிலும் கோள்கள் வாழ்கின்றபடியால் இவைகள் வீடுகள் (இராசிகள்) எனப் பெயர் பெறுவன. இவை: 1. மேழகம் (மேடம்), 2. விடபம் (இடபம்), 3. இரட்டை (மிதுனம்), 4. கடகம், 5. ஆளி (சிங்கம்), 6. கன்னி, 7. துலாம், 8. தேள் (விருச்சிகம்), 9. வில் (தனுசு), 10. மகரம், 11. கும்பம், 12. மீனம் என்பன.. இப்பன்னிரண்டு பிரிவுகளும் எங்ஙனம் பிரிக்கப் பெற்றன என்றால், கோளரசாகிய ஞாயிறு விண்வட்டத்தை எத்தனை நாட்களிற் சுற்றி வருகிறதோ, அக்கால அளவைப் பன்னிரண்டு பிரிவுகளாக்கி ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு வீடாகக் கருதப்பெற்றது. ஒவ்வொரு வீட்டிலும் ஞாயிறு வாழ்கின்ற கால அளவே ஒவ்வொரு மாதமாம். இம்மாதங்கள் தனித்தனி சில நாழிகை ஏறத்தாழ இருபத்தொன்பது முதல் முப்பத்திரண்டு நாட்கள்வரையுள்ள கால அளவாம். இவ் வளவு எக்காலத்திலும் ஒரே நிலையாக இருக்கும். ஞாயிறு (இரவி) மேழக வீட்டிலிருக்கும் காலம் மேழகமதி (மேடரவி) என்றும் இங்ஙனமாகப் பிற மாதங்களும் பெயர்பெறும்.

	மீனம்	மேழகம்	விடபம்	இரட்டை	
	புரட்டாசி $\frac{1}{4}$ பிற்கால் 1 தோணி 1	ஐப்பசி 1 அடுப்பு 1 காரத்திகை $\frac{1}{4}$	கார்த்திகை $\frac{3}{4}$ ஊற்றல் 1 மார்கழி $\frac{1}{2}$	மார்கழி $\frac{1}{2}$ திருவாதிரை 1 தை $\frac{3}{4}$	
கும்பம்	ஆவணி $\frac{1}{2}$ செக்கு 1 புரட்டாசி $\frac{3}{4}$			தை $\frac{1}{4}$ புணர்தை 1 ஆயில் 1	கடகம்
மகரம்	ஆடி $\frac{3}{4}$ திருவோ 1 ஆவணி $\frac{1}{2}$			மாசி 1 கணை 1 பங்குனி $\frac{1}{4}$	ஆளி
	ஆனி 1 உடைகுளம் 1 ஆடி $\frac{1}{4}$	வைகாசி $\frac{1}{4}$ பனை 1 கேட்டை 1	சித்திரை $\frac{1}{2}$ விளக்கு 1 வைகாசி $\frac{3}{4}$	பங்குனி $\frac{3}{4}$ கை 1 சித்திரை $\frac{1}{2}$	
	வில்	தேள்	துலாம்	கன்னி	

(வட்டம்தான் இங்ஙனம் சதுரமாகக் காட்டப்பெற்றது; எளிமைபற்றி.)

ஞாயிறு நம்முடைய கண்ணுக்கு நம்மைச் சுற்றிவருவது போலக் காணப்படினும் அது உண்மையிற் சுற்றுவதில்லை. அது ஒரே இடத்தில் அசையாமல் இருக்கிறது. நாம் வாழும் பூமியே ஞாயிற்றைச் சுற்றிவருகிறது. பூமியைப்போலவே திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கோள்களெல்லாம் ஞாயிற்றைச் சுற்றிவருகின்றன. திங்கள் தனது தாயாகிய பூமியையும் சுற்றிவருகிறது.

ஞாயிற்றால் ஏற்படுகின்ற நாள் அறுபது நாழிகைகளையுடையது. இந்நாள் என்றும் ஒரே அளவினதாக இருக்கும். இதனால் ஞாயிற்றைவைத்து எண்ணப்படுகின்ற நாள், மாதம், ஆண்டு என்பன என்றும் ஒரே அளவினவாம் என்பது பெறப்படுகின்றது. மேழகம் முதலிய பன்னிரண்டு வீடுகளும் அவ்வவற்றின் முதலிலுள்ள நாள்மீனின் பெயரால் அழைக்கப்பெறும்:

1. மேழகம் - ஐப்பசி வீடு
2. விடபம் - கார்த்திகை வீடு
3. இரட்டை - மார்கழி வீடு
4. கடகம் - தை வீடு
5. ஆளி - மாசி வீடு
6. கன்னி - பங்குனி வீடு
7. துலாம் - சித்திரை வீடு
8. தேள் - வைகாசி வீடு
9. வில் - ஆனி வீடு
10. மகரம் - ஆடி வீடு
11. கும்பம் - ஆவணி வீடு
12. மீனம் - புரட்டாசி வீடு

கணக்குக்கு எட்டாத காலம் தொட்டுத் தமிழ்மக்கள், பூமிதான் ஞாயிற்றைச் சுற்றிவருகிறது என்ற உண்மையைக் கணக்கிட்டு அறிந்திருந்தனர். ஞாயிறு மேழக வீட்டிலிருப்பதுபோலக் காணப்படும்போது மெய்யாகப் பூமி அதற்கு நேர் ஏழாவது வீடாகிய சித்திரை வீட்டிலிருக்கும்; அதனால் அவர்கள் அம்மாதத்தைச் சித்திரைத்திங்கள் என்றனர்; விடபத்தில் ஞாயிறு இருப்பதுபோலத் தோன்றும் காலத்தை வைகாசித்திங்கள் என்றனர். இங்ஙனமாக அவர்கள் இரட்டையை ஆனித்திங்களென்றும், கடகத்தை ஆடித்திங்கள் என்றும், ஆளியை ஆவணியென்றும், கன்னியைப் புரட்டாசியென்றும், துலாத்தை ஐப்பசி எனவும், தேளைக் கார்த்திகை எனவும், வில்லை மார்கழியென்றும், மகரத்தைத் தை எனவும், கும்பத்தை மாசி எனவும், மீனத்தைப் பங்குனி என்றும் அழைப்பாராயினர். ஞாயிற்றைப் பூமி சுற்றிவருகின்ற உண்மையைக்கொண்டு இடப்பெற்ற பெயர்களே சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி என்ற மாதப் பெயர்கள். பூமி ஞாயிற்றைச் சுற்றிவருவதனால் மாதங்கள் வருவதுபோல அது தன்னையே சுற்றிக்கொள்வதனால் கிழமை உண்டாகின்றது. பூமி தன்னை எங்ஙனம் சுற்றிவருகிறதென நுனித்தறிந்த தமிழ்மக்கள் அது கீழ்நோக்கிப்போகும் பக்கத்தைக் கீழ்த்திசை என்றும், மேலேயே வந்துகொண்டிருக்கும் பக்கத்தை மேல்திசை யென்றும் பெயர் தந்து அழைப்பாராயினர். கிழக்கு,

மேற்கு என்ற பெயர்கள் தமிழில் என்று தோன்றினவோ, அன்றே பூமி தன்னை இங்ஙனம் சுற்றிவருகிறதெனத் தமிழ்மக்கள் அறிந்திருந்தனரென்ற உண்மை நிலைபெறும்.

காலம் என்பது பொழுதெனப்படும். பொழுது பெரும் பொழுது, சிறுபொழுதென இருவகைப்படும். கார், கூதிர், முன் பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் எனப் பெரும் பொழுது ஆறு; அவை ஆவணி முதல் தனித்தனி இவ்விரண்டு மாதங்களுக்கு உரியன. மாலை, யாமம், வைகறை, காலை, நடுப் பகல், எற்பாடு எனச் சிறுபொழுது ஆறு. இப்பொழுதுகள் இன்னின்ன காரணங்களால் இன்னின்ன நிலத்துக்கு உரியன என்று தமிழ்ப்பெரியார் பகுத்துவைத்திருப்பது பிறநாட்டினர் யாவரும் வணக்கம் செய்யும் பெருமையது.

மாதம் என்பது மதி, திங்கள் எனப்படும். காலத்தை மதிப்பது மதி; மதிக்கப்பட்ட காலம் மாதம். பண்டைக்காலத்தில் மக்கள் திங்களின் வளர்பிறை தேய்பிறைகளைக்கொண்டே காலத்தை மதித்து அளந்துவந்தனர். அதனால் திங்கள், மதி, மாதம் என்பன ஒருபொருட்சொற்களாயின. அதன் பின்னரே விண்வட்டம் இருபத்தேழு நிலையங்களை உள்ளிட்ட பன்னிரண்டு வீடுகளாகப் பகுக்கப்பெற்று அவைகளில் ஞாயிறு தங்குவது போலக் காணப்படும் கால அளவு நிலையிடப்பெற்றது. அதன் பின்னர் பூமியே உண்மையிற் சுற்றுவது என்று கண்டு சித்திரை முதலிய மாதப்பெயர்கள் அமைக்கப்பெற்றுப் பெருவழக்கினவா யிருக்கின்றன. பின் திங்கள் வளர்வதும் தேய்வதும் ஆகிய அளவு காணத்தொடங்கித் தமிழ்ப்பெரியார் அது ஞாயிற்றை விட்டு விலகி விலகி வருவதனாலும், பின் நெருங்கி நெருங்கிப் போவதனாலும் வளர்பிறையும் தேய்பிறையும் உண்டாகின்றன என்பது துணிந்தனர். அதற்கு அவர்கள் விண்வட்டத்தில் திங்களின் நிலையும், ஞாயிற்றின் நிலையும் காணவேண்டுவ தாயிற்று. திங்களின் நிலையைக் குறிப்பிட்டார்கள்; அதுதான் அன்றன்று இன்னின்ன காலம்வரை இன்னின்ன நாள் (நட்சத் திரம்) என்று குறிப்பிடப்படுகிறது. பின் ஞாயிற்றின் நிலையை முடிவுகட்டினார்கள். திங்கள் இருக்கும் நிலையிலிருந்து ஞாயிற் றின் நிலை இவ்வளவிருக்கிறதென்ற கணக்கினால் அவர்கள் பிறை யைக் குறித்தார்கள். வளர்பிறை பதினைந்து; தேய்பிறை பதினைந்து ஆகப் பிறை முப்பது. வளர்பிறைப் பதினைந்தாம் நாள் முழுநிலா என்றும், தேய்பிறைப் பதினைந்தாம்நாள் உவா எனவும் பெயர்பெறும். அவை வருமாறு குறிக்கப்பெறும்:—

முதற் பிறை (பிரதமை). முத	மூன்றாம் பிறை (திருதியை) மூன்
இரண்டாம் பிறை (துதியை) இர	நான்காம் பிறை (சதுர்த்தி) நா

ஐந்தாம் பிறை (பஞ்சமி) ஐந்
ஆறாம் பிறை (சட்டி) ஆறு
ஏழாம் பிறை (சத்தமி) ஏழு
எட்டாம் பிறை (அட்டமி) எட்
ஒன்பதாம் பிறை (நவமி) ஒன்
பத்தாம் பிறை (தசமி) பத்
பதினொன்றாம் பிறை (ஏகாதசி) ப. ஒ
பன்னிரண்டாம்பிறை (துவாதசி)ப.இ
பதின்மூன்றாம் பிறை (தி. தசி) ப. மூ
பதினான்காம் பிறை (சதுர்த்தசி) ப.நா
முழுநிலா (பௌர்ணமி) முழு
உவா (அமாவாசை) உவா

பண்டைக்காலத்து ஒவ்வொரு மாதத்திலும் தேய்தியும், கிழமையும், பிறையும், நாள்மீனும் கணித்தறியப்பெற்றன. தேய்தியென்பது மாதம் தொடங்கியதிலிருந்து தேய்ந்துபோகும் கிழமைகள். வீடுகளில் பூமி தங்கியிருக்கும் காலம் தேய்ந்துபோவது தேய்தி எனப் பெயர் பெற்றது; அதுதான் தேதி என வழங்கப்பெறுகிறது. காலத்தை உண்பதற்கு அதாவது தேய்ப்பதற்கு நாழிபோல அளந்தழிப்பது ஞாயிறு என்றார் பண்டைப் பெரியாரும். கிழமையும் பிறையும் நாள்மீனு (வாரம், திதி, நக்ஷத்திரம்) மாகிய மூன்றும் முத்திறம் (திரயங்கம்) என்னப்பெற்றன. ஐந்திறம் (பஞ்சாங்கம்) என்ற பகுப்பு அண்மையில் ஏற்பட்டதுதான். கிழமை, பிறை, நாள்மீனோடு ஓக (யோக)மும் கரணமும் சேர்ந்து ஐந்திறமாக்கப்பெற்றன. யோகம் என்பது கூட்டம். திங்கள் நிலையும் ஞாயிற்று நிலையும் கூட்டப்பெற்று ஓகமாகின்றன; இவை இருபத்தேழு. கரணம் என்பது பிறையிற் பாதி; இது பதினொன்று. ஒவ்வொரு பிறையின் முற்பாதிக்கு இன்ன கரணம்; பிற்பாதிக்கு இன்ன கரணம் என்பது அமைப்பு. ஐந்திறத்தில் பிறை பகலில் முடிந்தால் அதன் பிற்பகுதிக்குள்ள கரணத்தைக் குறித்து பிறைக்குரிய நாழிகையும் எழுதப்பெற்றிருக்கும். பிறை இரவில் முடிந்தால் அப்பிறைக்குரிய நாழிகை பாதியாக்கப்பெற்று வந்த நாழிகையுடன் முற்பாதிக்குரிய கரணம் குறிக்கப்பெறும். ஓகங்கள் இருபத்தேழும் பின்வருவன குறிப்பெழுத்துக்களுடன் :—

1. கம்பம் (விட்கம்பம்) - கம்.
2. விருப்பம் (பிரீதி) - விரு.
3. வாழ்நாள் (ஆயுஷ்மான்)-வாழ்.
4. பெருஞ்செல்வம் (சௌபாக்கி[யம்) - பெரு.
5. நலம் (சோபனம்) - நல.
6. மாகண்டம் (அதிகண்டம்)-மா.
7. அறம் (சுகர்மம்) - அற.
8. துணை (திருதி) - துணை.
9. சூலம் - சூல
10. கண்டம் - கண்.
11. ஆக்கம் (விருத்தி) - ஆ.
12. நிலை (துருவம்) - நிலை.
13. அரவு (வியாகாதம்) - அர.
14. எக்களிப்பு (அரிசமயம்) - எக்.
15. வேல் (வச்சிரம்) - வேல்.
16. வல்லமை (சித்தி) - வல்.
17. கொலை (வியதீபாதம்) - கொ.
18. காயம் (பரியான்) - காய.
19. தாழ்வு (பரிகம்) - தாழ்.
20. காட்சி (சிவம்) - காட்.
21. திறம் (சித்தம்) - திற.
22. புகழ் (சாத்திரம்) - புக.
23. காவல் (சுபம்) - காவ.
24. தெளிவு (சுப்பிரம்) - தெளி.
25. நான்முகன் (பிராமியம்) - நான்.
26. வேந்தன் (மாகேந்திரம்) - வேந்.
27. பேய் (வைதிருதி) - பே.

கரணங்கள் (பதினொன்றும்) குறிப்பெழுத்துக்களுடன் :—

1. மடங்கல் (பவம்) - ம.
2. புலி (பாலவம்) - புலி.
3. பன்றி (கௌவம்) - பன்.
4. கழுதை (தைதுளம்) - கழு.
5. யானை (கரசை) - யா.
6. எருது (வணிசம்) - எரு.
7. கோழி (விம்சடி) - கோழி.
8. கூகை (சகுனம்) - கூ.
9. நாய் (சதுஃச்பாதம்) - நா.
10. பாம்பு (நாகவம்) - பா.
11. புழு (கிம்ஃச்துக்னம்) - புழு.

ஐந்திறத்தோடு நச்சுவேளை (தியாச்சியம்) என்பதொன்று அல் (இரா) எல் (திவி) என்று குறிப்பிடப்பெற்று வருகிறது. ஒவ்வொரு கிழமைக்கும் இராகுகாலம் என்ற நச்சுவேளை இருப்பதுபோல ஒவ்வொரு நாள்மீனு (நட்சத்திரமு)ம் தொடங்கி இத்தனை நாழிகைக்குமேல் நச்சுவேளை வரும் என்ற திட்டம் இருக்கிறது ; இஃது ஒரு காலத்தைப்போலவே மூன்றே முக்கால் நாழிகை வரை இருக்கும். நாள்மீன்கள் அறுபது நாழிகை நான்கைந்து நாழிகைகள் கூடியும் குறைந்தும் திட்டமில்லாமலிருப்பதால் கூடுதல் குறைதலுக்குத் தகுந்தபடி தொடங்கும் நேரம் இதுவென்பது கண்டுபிடிக்கப்பட்டு ஐந்திறத்தில் கரணத்தின் பின்னால் எழுதப்பெறுகிறது. அது பகலில் தொடங்கினால் எல் (திவி) என்றும், இரவில் தொடங்கினால் அல் (இரா) என்றும் குறிக்கப்பெறும்.

ஓகம் (யோகம்) என்பது சேர்க்கை என்று கூறினோம். இன்னின்ன கிழமையோடு இன்னின்ன நாள் (நட்சத்திரம்) கூடினால் இன்னின்ன ஓகம் என்ற ஓர் ஓகக்கணக்கும் இருக்கிறது. இது மூன்றுவகைப்படும். அவை வல் ஓகம் (சித்தயோகம்), வாழ்ஓகம் (அமிருதயோகம்), சாவு ஓகம் (மரணயோகம்), என்பன. அவை நச்சுவேளைக்கு அடுத்து முறையே வல் (சித்த), வா (அமி), சா (மர) எனக் குறிப்பிடப்பெறும்.

இப்போது வெளிவரும் ஐந்திறங்களில் அவமா, திரிதினபிருக்கு எனக் குறிப்பிடப்பெறுவன முறையே முக்கூட்டு முந்நாளவிரி என்பன. ஒரே கிழமையில் மூன்று பிறைகள் கூடுவது முக்கூட்டு, ஒரே பிறை மூன்று கிழமைகளில் விரிந்திருப்பது முந்நாள்விரி. கரிநாள் என்பது பண்டைக்காலத்து இருந்த யாரோ சில அரசர் மடிந்தகாலமாகக் காணப்பெறுகிறது. இதைத்தவிர அந்நாட்களினால் தீமையின்று. ஆதலின் மக்கள் மயங்கி நற்செயல்கள் தொடங்காமலிருப்பது தவறு.

முழுத்தம் என்பது முழுப்பொருத்தம் என்பதாம் ; ஒரு செயலுக்கு முழுதும் பொருந்திய நேரம் முழுத்தமாம். இதுவே சொல்லத் தெரியாமல் முகூர்த்தம் எனப்பெறுகிறது. இன்னின்ன செயல் செய்ய இன்னின்ன

காலம் பொருத்தமானது என்ற திட்டம் இருக்கிறது. அத்திட்டத்தைக்கொண்டு அவ்வாறே முகூர்த்தத்தை எளிதாகத் தீர்மானித்துக் கொள்ளலாம். முகூர்த்தங்களை வைத்துக்கொண்டு செய்யப்பெறும் குருக்களின் (புரோகிதரின்) செயல்களெல்லாம் வீண்செயல்களென்றும், அவை சிலருடைய பிழைப்புக்காகக் கற்பிக்கப்பெற்றவை என்றும் அறிஞர் கூறுகின்றனர். அறிவுக்குப் பொருத்தமில்லாத சில செயல்கள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, சீமந்தம் என்பதை ஆராய்வோம். ஒருவனுடைய மனைவி கருவுற்றாள் என்றால் அக்கருத் தன்னால்தான் உண்டாக்கப்பெற்றது என்றதைக் கணவன் ஏற்றுக்கொள்வதாகச் செய்வதே சீமந்தம். நாமே கடவுள் முன்னின்று நமக்குள்ள குறைகளைத் தெரிவித்து மனமுருகி முன்னோர்கள் அருளியதேவார திருவாசகங்களைப் பாடுவது நற்பயன் தரும்; இதுவே உண்மையான கழுவாயாகும்.

ஐந்திறத்தில் குறிக்கப்பெறும் ஆண்டுகளைப்பற்றிச் சில குறிப்பிடுவோம். ஊழி என்பதுதான் யுகம் எனப்படுவது. இப்போது நடைபெறுவது கலியூழி (கலியுகம்). இது கி. மு. 3102-ல் தொடங்கியது. ஐந்திறக் கணக்குகளெல்லாம் கலியூழி ஆண்டினையும் கலியூழி நாளையும் கொண்டே கணக்கிடப் பெறுகின்றன. ஆதலின், குறைந்தது கலியூழி தொடங்கி இன்றைக்கு ஐயாயிரத்து நாற்பத்தாறு ஆண்டுகளிலிருந்தே தமிழ்ப் பெரியார் ஐந்திறம் கணக்கிட்டு வருபவராதல்வேண்டும். அக்காலத்து மனிதர்க்கு சராசரி வயது நூற்றிருபதென்பது அவர்கள் ஒன்பது கோள்களுக்கு வகுத்திருக்கும் கால (திசை) அளவால் நிலைபெறும். அக்காலத்து இளமைக்காலம் நாற்பத்தெட்டு ஆண்டுகள் என்று சங்கப் புலவர் பாடியிருக்கின்றனர். "அறுநான் கிரட்டி இளமை." கபிலர் பெருமான் தமது புகழ் மிக்க அகவலைப் பாடியபோது மனிதர் சராசரி வயது நூறாகி விட்டது; "மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை" தாவீது என்ற பெரியார் பாடும்போது சராசரி வயது எழுபது அல்லது எண்பதாகக் குறைந்துவிட்டது; (விவிலியநூல் பாடிய ருற்று தாவீதின் தொண்ணூறாவது இசைப்பாட்டு பத்தாவது பத்தியில்) "நமது ஆயுள்நாள் எழுபது ஆண்டுகள், வலிமையினால் அஃது எண்பதானாலும்." இற்றைக்கு 1867 ஆண்டுகளுக்கு முன்னிருந்த சாலிவாகனன் என்ற மன்னர்பிரான் காலத்தில் இச்சராசரி வயது அறுபது; அதனால் அவன் அறுபது ஆண்டுகளை ஒரு வட்டமாக்கி அவைகளுக்குப் பிரபவ முதல் அட்சய முடியவுள்ள அறுபது பெயர்களையும் இட்டான். அரசர்கள், சங்கங்கள் இக்காலம் இருபத்தைந்தாவது ஆண்டில் வெள்ளி

விழாவும், ஐம்பதாவதாண்டில் பொன்விழாவும், அறுபதாவதாண்டில் மணிவிழாவும் கொண்டாடுவதுபோல அக்காலம் மக்கள் நூற்றாண்டு முழுக்கு (சதாபிடேகம்) என்ற விழாவைக் கொண்டாடிவந்தனர்; இஃது இப்போது நூறுபிறைபென்று கொண்டு எண்பதாவது வயதிலேயே நடைபெறுகிறது. அறுபதாவதாண்டு நிறைவு (சட்டியப்தபூர்த்தி) விழாப் பலரால் கொண்டாடப் பெறுவதை நாம் காண்கின்றோம். இக்காலம் சராசரி ஆண்டு அறுபதிலும் மிகக் குறைந்துவிட்டது. இங்ஙனம் வாழ்நாள் குறைவதன் காரணம் சட்டை முதலியவைகளால் உடலை மூடியிருப்பதும், சுடச்சுடக் காப்பி தேநீர் முதலிய குடிப்பதும், பிஞ்சிற் பழுப்பதும், வறுமை முதலியவுமாம்.

ஆரியர், தமிழ் நாட்டுக்கு வருமுன் வானநூலை ஒரு சிறிதும் அறியார். அவர் அறிந்ததெல்லாம் திங்களுடைய வளர்ச்சி தளர்ச்சியைக் கண்டு காலத்தைக் குறிப்பிடுவதுமட்டும்தான். உவாவு (அமாவாசை)க்கு உவா ஒரு மாதம் என்று அவர்கள் கணக்கிட்டனர். அவர்கள் பல்கித் தமிழ் நாடடைந்தபோதே தமிழ் மக்களுடைய மதிநுட்பத்தையும் கணித முறைகளையும் கண்டு வியந்து தாமும் அம்முறையைக் கையாளத் தொடங்கினர். அவர்கள் தங்கள் பிறை மாதங்களுக்குப் பெயர் கொடுக்க நினைத்து சித்திரை வைகாசி முதலிய மாதப் பெயர்களையே பெரும்பாலும் சைத்திரம், வைகாசம் எனத் திரித்து வழங்கத் தொடங்கினர். சித்திரை மாதத்தில் வரும் உவாநாளுடன் முடிகிற மாதம் சைத்திரம் எனவும், இவ்வாறே ஏனைய மாதங்களுக்கும் பெயர் வைத்துக்கொண்ட ஆரிய மக்கள் சில ஆண்டுகளின் பின் தங்கள் கொள்கைக்கு மாறாகச் சைத்திரம் பங்குனியிலும், வைகாசம் சித்திரையிலும் இவ்வாறே ஏனைய மாதங்களும் முடிவடைவதைக் கண்டு அஞ்சினர்களாய் சித்திரை முதலிய மாதங்களே நிலையானவை யாதலினால் அவைகளோடு தங்கள் புதிய மாதங்கள் கூடாமற்போனால் பயனற்றுப்போம் என்று தெரிந்து பங்குனியோடு முடிகிற தமது சைத்திரத்தை அதி மாதம் அதாவது பொய் மாதம் என்று தள்ளிச் சித்திரை மாதத்தின் உவாவுடன் முடிகிற பிறை மாதமே உண்மைச் சைத்திரம் (நிசசைத்திரம்) என்று கொள்வாராயினர். அவ்வழக்கமே இன்றும் வழங்கி வருகின்றது. தமிழ்மக்கள் சித்திரை முதலிய பன்னிரண்டு மாதங்களுக்கும் பெயரமைத்திருக்கிற நுட்பத்தை மாற்ற எண்ணியே தை (பூசம்), புணர்தை (புணர்பூசம்) என்ற நாள்மீன் வரிசையைப் புணர்தைதை என மாற்றிவிட்டனர்.

இது எங்ஙனம் எனில், அவர்கள் வடமொழியில் தமிழ்க் கணித நூல்களையெல்லாம் மொழிபெயர்த்து எழுதும்போது

இச்சூழ்ச்சியைக் கொண்டனர். கணிதம், மந்திரம் என்ற கலைகள் மங்கிமங்கிப்போனதற்குக் காரணம் அப்புலவர்கள் இவைகளைத் தம் மக்களுக்கும் காட்டாது மறைத்துவரும் இயல்பினராயிருந்தமைதான். அதனால் கணிதநூல்கள் அங்கங்கே ஒன்றிரண்டே காணப்பெற்றன. நாளடைவில் ஆரியர் புரோகிதராகி ஐந்திறத்தைத் தம் வயப்படுத்தி அறியா மக்களை ஏமாற்றி அங்கங்கேயிருந்த தமிழ்க் கணித நூல்களைக் கைப்பற்றி அழித்தெறிந்து விட்டனர். இன்றும் தமிழ் மக்களிற் பலர் அறியாமையிருளில் அழுந்தி உண்மையுணராமல் தமக்கே கேடு சூழ்வாராயிருக்கின்றமை வெளிப்படை. ஆரியர் இன்னும் தமது பிறை மாதக்கணக்கில் நிற்கின்றமையினாலே தான் ஆவணியில் வரும் பிள்ளையார் சிறந்த நாளைப் புரட்டாசியிலும், புரட்டாசியில் வரும் கலைமகள் விழாவை ஐப்பசியிலும், ஐப்பசியில் வரும் தீபாவளியைப் புரட்டாசியிலும், கந்தர் சட்டி விழாவைக் கார்த்திகையிலும், மாசியில் வரும் சிவனிர (சிவராத்திரி)வைத் தை மாதத்திலும் சில ஆண்டுகளில் தமது பஞ்சாங்கங்களில் குறிப்பிட்டுத் தமிழ் மக்களில் அறியாதார் பெரும்பாலரைத் தவறான வழியில் நடந்து பயனை இழக்கும் படிக்கும், சரியான காலத்திற் செய்யாத குற்றத்திற்கு ஆளாகும்படிக்கும் செய்துவருகின்றனர். இக்காரணம்பற்றியே நாம் சென்ற முப்பத்திரண்டு ஆண்டுகளாகச் **சைவப் பஞ்சாங்கம்** வெளியிட்டு வருகின்றோம்.

இருபத்துநான்கு ஆண்டுகளுக்கு முன்னால் பிரபவ ஆண்டுக்கு ஐந்திறம் வெளிவந்தவுடன் பண்டைத்தமிழ் சொற்களையே குறித்தெழுதித் தனித் தமிழ்ப் பஞ்சாங்கம் வெளியிட வேண்டுமென்ற கருத்துடன் அவ்வாண்டுக் கடைசியில் வெளி வந்த விபவ ஆண்டு ஐந்திறத்தில் வடமொழிப் பெயர்களுக்குச் சரியான தமிழ்ப் பெயர்களைக் குறித்து வெளியிட்டோம். சென்ற எட்டாண்டுகளுக்கு முன்னால் தனித்தமிழ் ஐந்திறம் வெளியிட எல்லா முயற்சிகளும் நடைபெற்றன; அப்போது எம்மோடு துணையாயிருந்து பல முடிவு காண உதவியவர் பெரும் புலவர் தேவநேயனாரவர்கள். அவர்களுக்கு எமது நன்றி.

இப்போது தனித்தமிழ்ப் பஞ்சாங்கம் (ஐந்திறம்) வெளியிட அமயம் பார்த்திருக்கின்றோம். தமிழ்ப்பெருமக்கள் கருத்தறிய அவாவுடையோம்.

அருள் பத்து

முதற்றிருப்பாட்டு:

“சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே.” —(ஆளுடைய அடிகள் க.)

விளக்கொளியானது கண்ணாடியின் நிறங்களால் வேறு வேறாகத் தெரிந்தாலும் அதன் ஒளி ஒரே ஒளியாய்த் தோன்றுவதொப்ப, ஆண்டவன் வேறு வேறாக உலகில் கலந்திருந்தாலும், ஒரே தன்மை உடையவனாகவே விளங்குகின்றான். அவனுக்கு ஒரு வேறுபாடும் இல்லை. அவன் இயல்பிலே கட்டற்றவன்.

ஆண்டவனை ஒளித்தன்மையாகக் கொள்வது மிகவும் சிறப்புடைத்து அவ்வொளியைக் காணலாம் அதற்குக் கனிவு வேண்டும்; அன்பு வேண்டும்; அறிவும் வேண்டும்; அறிவு இல்லையானால் மற்ற ஆற்றல்களினால் பயனில்லை. அறிவு திருந்தாவிட்டால் எவ்வளவு அறம் செய்யினும் எவ்வளவு நன்மை செய்யினும் பயனில்லை படிப்பதற்கு அறிவு வேண்டும்; விளையாட்டு வேண்டாம் செயலாற்றல் என்னும் விருப்பத்தை அன்பு என்றும் சொல்வர். ஆண்டவன் நமக்குச் செய்யும் பல உதவிகளில் அறியாமையை நீக்குவது சிறப்புடைத்து. அறியாமையைச் செய்யும் ஆணவமல அழுக்ககலவே உயிர்க்குப் பிறப்பைப் பெருமான் நல்கினன்.

வீட்டில் ஏற்றப்படும் ஒளிக்கு எல்லை உண்டு. ஆண்டவனாகிய ஒளி எல்லையற்ற பேரொளி. ஞாயிறு, திங்கள், தீ என மூன்றையும் ‘முத்தீ’ எனச் சொல்லுகிறோம். தீ ஒன்றைப் பற்றி ஒளிர்வதனாலும், ஞாயிறு பகலை விளக்குவதாலும், திங்கள் இரவில் ஒளி செய்வதாலும் உணர்கின்றோம். இந்த ஒளிகளுக்கெல்லாம் எல்லை உண்டு. வட சொல்லில் எல்லையுள்ளதற்குக் ‘கண்டம்’ என்றும், எல்லையில்லதற்கு, அகண்டம்’ என்றும் வழங்குகிறார்கள். இரண்டு முள்ளது ‘கண்டாகண்டம்’ எனப்படும். இம்மூன்றிற்கும் ஒளி நல்குவது ஆண்டவனே. படிப்பார்க்கும் படிப்பிப் பார்க்கும் அறிவைக் கொடுப்பது தலைமை ஆசிரியரே. தலைமை ஆசிரியருக்குள்ள அறிவு, நிறைந்த அறிவு. அவர் எல்லா வகுப்பும் நடத்துவர். வகுப்பு ஆசிரியருக்குக் கொடுத்த பாடத்தைத் தான் நடத்த முடியும் இவ்வெடுத்துக்

காட்டில் தலைமையாசிரியர் போலக் கடவுளை ஓர்க. தலைமை ஆசிரியராக ஆவதற்கு முன்பு அவர் வேற்றுமையின்றி ஒரு பொதுவான ஆசிரியராகத் தோன்றினும் 'தலைமை ஆசிரியர்' என்று வைத்தபின் அவர் மதிப்பு மிகும். இதுபோல் கடவுள் உடனாய் நின்று ஊக்கினும் பொருள்தன்மையில் வேறாய்ச் சிறப்புற்று விளங்குகின்றார்.

'சோதியே சுடரே' என்ற இப்பாட்டில் 'சுடர்' என்ற சொல்லில் ஞாயிறு திங்கள் என்ற இரண்டும் அடங்கியுள. சோதி என்ற சொல்லில் தீ அடங்கியுள்ளது. சுயம் சோதி—தனிச்சுடர். 'சோதி' என்பதை வடசொல் என்றுதான் பலர் கருதுகிறார்கள். அறிவது ஒளியைக்கொண்டுதான் அறிய வேண்டும் என்பதனால் தமிழ்ச் சொல்லென்றே கொள்ளலாம். சோதித்தல்—விளைதல்—ஆய்தலென்பன காண்க.

இனி, பகலவனின் சுடர் இருக்கிறது; பெரு வெளிச்சம் தருகிறது; தந்தாலும், வீட்டிற்குள் வராவிட்டால், விளக்கு ஏற்றித்தான் வீட்டிற்குள் செல்லவேண்டும். பலகணி வழியாகவும் வெளிச்சம் வரும். பலகணி—பல கண்களையுடையது என்பதால் அப்பெயர் அதற்கு வந்தது. பகலாய் இருந்தாலும் அடைத்த வீட்டிற்குள் ஒளியின் துணையின்றி நுழைய முடியாது.

இவ் ஒளி அனைத்தும் புறத்தேதான் இருக்கின்றன; அகத்தில் செல்லாது. கனவு காணுவதுபோல் வெளிச்சம் எண்ணும் பொருளில் சோதி என வழங்குவதும் உண்டு. அது, ஒரோவழி அகத்துத் தெரிந்தாலும் உறங்காமல் கண்ணை மூடிக்கொண்டிருக்கும்போது ஒளி தோன்றுவதில்லை. அறிவாகிய அகக்கண் எப்பொழுதும் தெரியும்; கடவுளை வணங்கி ஐந்தெழுத்தோதி ஒழுக்க முறையில் நிற்கின்றவர்களுக்கு, அந்தக் கண் விளங்கும். நாம் படிக்கும் பாடம் மனத்தில் விளங்குவது எப்படியென்று எண்ணிப் பார்த்தால் இது நன்கு விளங்கும்.

'சுரிகுழல் பணைமுலை மடந்தை பாதியே'

என்பதில் மடந்தை என்பது, அடக்கமும் இரக்கமும் உடைய பெண். பணை—பெருப்பு. குழல்—கூந்தல். சுரிகுழல்—சுருண்டு நெளிந்து அழகாயிருக்கும் கூந்தல்.

தாய்மைத்தன்மைக்குச் சிறப்பாம் மார்பைப் பெண்களுக்குச் சிறப்பாகச் சொல்லுவது ஆன்றோர் மரபு. இது, திருக்குறள், 'கல்லாமை' என்ற தலைப்பில் 'கல்லாதவன்' அறிவுடையாரவையில் ஒன்றைப் பேச முற்படுவதற்கு எடுத்துக் காட்டுமுகமாக,

"கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று"

—திருக்குறள், ௪0௨.

என்றருளிச் செய்ததனால் அறியலாம்.

கணவனும் மனைவியுமாகக் குடும்ப வாழ்க்கை நடத்துவதில் மேற்கண்ட பாட்டில் உள்ளபடி குடும்பம் ஒப்புமையாக நடக்கவில்லையானால் இன்பம் முறையாக எய்தாதவர் என்று சொல்ல முடியாது. ஆகவே, அவர்களின் நோக்கம் மக்களைப் பெறுவது ஒன்றே ஒப்புமை என்பது. விலைமகளிர் வாழ்க்கை மக்கட்பேறல்ல; பொருள் பெறுவதுதான். மணம்புரிந்து கொள்வது இன்பப்பெருக்கு ஒன்றிற்காகமட்டும்தான் என்றிருக்குமானால் அது மணமாகாது. பெண்களுக்கு மார்பைச் சிறப்பாகக்கொள்ளும் இடமெல்லாம் மக்கட் பேறேயாம். அப்பிள்ளைப் பேறுதானும் மணத்திற்கப்புறமல்லவா—அல்லது மணவாழ்க்கை துவங்கிய பின்பல்லவா — உண்டாகும் என்றுரைப்பர் சிலர். பிள்ளைப்பேறு கருதாத வாழ்க்கை அனைத்தும் செம்மையாகாது. மணவாழ்க்கைத் தொடக்கமே மக்கட்பேற்றின்வேட்கையில்தானுண்டாகின்றது. இஃது, "உவந்திருவரும் புணர்ந்திங்கு உலகுயிர் எல்லாம் ஈன்றும்" ஒன்றும் சிவபெருமானின் திருவுள்ளத் திருக்குறிப்பாகும்.

சமைத்து உண்ணற்குமட்டுமேல் ஆண்பெண்ணுள் ஒருவர் துணை ஒருவர்க்கு வேண்டப்படுவதில்லை. செந்நாப்போதாரும் மக்கட் பெறுதார்க்கு 'அன்பு' ஓங்காது, விரியாது, வளராது என்று சொல்கிறார். பிள்ளையைப் பெற்றவர்களுக்குத்தான் இயல்பாகவே இரக்கம் மிகுதியாக வரும்.

ஆகவே, நூல்களில் மார்பைச் சிறப்பித்துவரும் இடங்களெல்லாம் இதுபோல் சிறந்த கருத்துப் பொருள் விளக்க என்று தெரிந்தால்தான் அது பயன்பெறும். இன்றேல் பொருள் மருளாகும். (அர்த்தம் அனர்த்தமாகும்.) இதுதான் இப்பாட்டுக்குற்ற பொருள்.

ஆண்டவன் சோதி, சுடர், சூழொளி விளக்காக இருக்கின்றான். படிப்படியாகத்தான் நாம் அவனை அடைய வேண்டும். இதில் ஒரு குறிப்பு உணர்ந்துகொள்ளவேண்டும். அஃதாவது:—

விளக்கிற்குத், திரி முதலிய பற்றுக்கோடு வேண்டும். ஞாயிறு அல்லது திங்கள் தானாக நின்று ஒளிதரவில்லையா? என்று கேட்கலாம். உண்மைதான்; ஆனால் அவை என்றும் இறைவனை யொப்ப ஒன்றுபோல் நிலைபெறாமல் ஒருகாலத்தில்

இல்லாதொழிந்துவிடுகின்றது. ஆண்டவனாகிய விளக்கோ என்றும் நின்று குன்றாப் பயன்தருகின்றது.

சோதியே........பாதியே—அடக்கமும் இரக்கமும் நிரம்பிய அம்மையை ஒருபாதியாகவுடைய சோதியே. பரம்-மேலானது. 'பால்வெண்ணீறு' என்றது, ஆண்டவன் பால்போலும் வெண்மையான திருநீற்றை அணிந்திருப்பவன் என்பதைக் குறிக்கும். சுடுகாட்டுச் சாம்பல் கருமையல்லவா, வெண்ணீறு என்பது எப்படிப் பொருந்தும் என்று வினவின்? அற்றன்று. அனைத்தையும் அவன் நீறாக்கி வெண்மையாக்கிக் கொள்கிறான் என்று கொள்க. நாமும் வெண்மையாக்க முயலவேண்டும்? அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? கூறுவல் கேண்மின். பசு தரும் சாணத்தைத் தூய்மையாகப்பெற அதை நல்கும் மாடுகளைக் குளிப்பாட்டி, நல்ல இரைகொடுத்து நல்ல பருத்திக் கொட்டை, தூயநீர் இவைகள் கொடுக்கவேண்டும். மாலை வெயிலும் இளவெயிலும் படச்செய்யவேண்டும். சாணத்தை மண் படாமல் விழும்போது ஏந்தச் செய்யவேண்டும். இப்பொழுதும் பழனியில் படி ஒரு ரூபாயாக விற்கும் நீறு இருக்கின்றது. அதுவும் வெண்மையன்று. சில இடங்களில் 'திருநீறுதானா?' என்று ஐயம் கொள்ளும் நிலையில் பட்டுப்போல் தூய வெண்மையாகவும் இருக்கிறது.

மண்ணுலகில் ஒருவனை ஒருவர் அறியாதிருக்கிறார் என்றால், அவர் கள்ளச்செயல் செய்தவராக இருந்தால்தான் அப்படி இருக்க முடியும். ஆனால் ஆண்டவன் நீதிநிறைவுடையவனாக இருப்பதனாலேயே நமக்கும் காணமுடிவதில்லை. திரைக் காட்சி (சினிமா) பார்ப்பவனுக்கு, 'திருக்குறள் வகுப்பு' நடப்பது தெரியுமா? அதுபோல் எவன் எந்த நாட்டத்தில் இருக்கின்றானோ அதனையே அவன் காணமுடியும். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்". ஆண்டவன் அடியாருக்கு—தொண்டர்களுக்கு—அன்பர்களுக்கு அண்மையனாகவே இருக்கின்றான். தன்னைப் பெரியவன் என்று எண்ணுகின்ற செருக்குடைய எவனுக்கும் ஆண்டவன் தோன்றமாட்டான். அயனும் மாலும் தங்கள் செருக்கினால்தான் ஆண்டவனைக் காணமுடியவில்லை. பணம் நிறைய இருக்கிறதே! நமக்கு ஏன் படிப்பு வேண்டும் என்று ஒருவன் வாளா இருப்பானானால் அவனுக்கு ஒருநாளும் படிப்பு எங்ஙனம் வாராதோ, அதுபோலவே எவ்வளவு மேன்மை வாய்ந்தவர்களும் ஆண்டவனருளை நாடாவிட்டால் வாழ்வில் உய்ய மாட்டார்கள். அண்ணாவி, படிக்கும் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்; படியாத பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுப்பதில்லை. அஃது ஆசானின் குற்றமன்று; மாணவனின் குற்றமே.

இதுபோல் கடவுளுக்கு அன்பு பூண்டு அடியவர்கட்குத் தொண்டு செய்தால் கடவுளருளைப் பெறலாம். இல்லாவிட்டால் முடியாது இதிலிருந்தே கடவுள் நீதியுடையவர் என்று தெரிந்துகொள்ளலாம். ஆளுடைய நம்பிக்கு, கடவுள் தோழர்; அங்ஙனமிருந்தும், சங்கிலிநாச்சியாரிடம் இறைவன் முன்னிலையில் கூறிய ஆணையையும் மீறி, பரவைநாச்சியார் மனைக்குச் செல்லலுற்றபோது, கண்ணைக் கெடுத்துவிட்டார். இந்நிகழ்ச்சியிலிருந்து, கடவுளானவர், தமக்கு அன்பராயினும், அடியாராயினும், தோழராயினும், ஏழையாயினும், செல்வராயினும், குற்றம் செய்தவர்களை ஒறுத்தே உய்விப்பர் என்பது விளங்கும். ஆடையை அழுக்ககற்றும் வண்ணான் அவ்வாடையை மேலும் உவர் முதலிய அழுக்கேற்றி நையப்புடைத்து நறுநீர் தோய்த்து அழுக்ககற்றுவன். அதுபோல் முழுமுதல்வனும் மன்னுயிரின் 'பண்டே புல்லிய மல'த்தைப் போக்குவதற்கு வினையழுக்கேற்றி அருள்நீர் தோய்த்து மருள் நீக்கித் தெருளாக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

பங்கயம்—தாமரை. சேற்றினின்றும் தோன்றியதால் இப்பெயர் பெற்றது. பங்கம் - சேறு; சேற்றுத்தோன்றி.

செல்வத் திருப்பெருந்துறையுள் என்பதன்கண், அன்புச் செயலும், ஆண்டவன் திருவருளும், அவரிடமும் வணக்கமான நடக்கையும், நேர்மை குன்றாமையும்தான் செல்வம் என்று சொல்லவேண்டும்.

ஆகாதபிள்ளை என்றாலும், பெற்றோர்கள் சோறுபோடாமல் இருக்கமாட்டார்கள். தீமையைத் திருத்தி நல்லவனாக ஆக்கத்தான் முனைவார்கள். மருந்து கொடுப்பதற்கும், உணவு கொடுத்துத்தானே கொடுக்கவேண்டியிருக்கிறது. அதுபோலவேதான் ஆண்டவனும் வையத்து வாழ்வருளி வருத்திச் சைவத்திற் புகுத்திச் சிவமாம் பெருவாழ்வில் என்றும் இருத்துவன். எல்லாச் செல்வமும் அருள் செல்வத்தில் அடங்கிவிடுகிறது. கடவுள் நினைப்பு, அவனருள், அருள்வழியான நற்செயல் இவைதான் செல்வம் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இது,

" ... ...
நெடிய மொழிதலும் கடிய வூர்தலுஞ்
செல்வ மன்றுதன் செய்வினைப் பயனே;
சான்றோர் செல்வ மென்பது சேர்ந்தோர்
புன்க ணஞ்சும் பண்பின்
மென்கட் செல்வஞ் செல்வமென் பதுவே."

ற். உசo.)

தேவாரத்தில்,

" செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே."
(ஆளுடைய பிள்ளை : அ0—ரு.)

என்று அருள் ஆன்றோர்கள் குறித்தவாற்றால் அறியலாம்.

குருந்தம்=குருந்தமரம். துறை=கரையேறுமிடம். 'திரு' 'பெரு' என்ற அடைபெற்றுத் 'திருப்பெருந்துறை' யென்றதனால் இம்மை வாழ்வுமட்டுமல்ல; இம்மை வாழ்வு, மறுமை வாழ்வு, வீட்டு வாழ்வு மூன்றும் தருகிறது என்று கொள்ளவேண்டும். இறைவன் மரத்தின்கீழ் இருப்பதாகப் பல நூல்களில் சொல்லப் படுவது எதற்கென்றால்; மரம் தீமையை நீக்குகிறது. நமக்குக் கூட உண்பதற்குக் காய்கனி முதலியன தருகின்றது. தங்க நிழல் தருகின்றது. மாங்காயை எடுத்துக்கொள்வோமானால் அதை மாத்திரம் வைத்துக்கொண்டு சோற்றை உண்டுவிடலாம். இதுபோன்று மரத்தினால் நாம் பல பயன்கள் பெற இருப்பதனை லேயே என்றறிக. இன்னும் மரங்களுக்கு நாம் சிறுபயனைக் கொடுக்கின்றோம். அவை நமக்குக் குலைகுலையாகத் தருகின் றன. அதுபோலவேதான் ஆண்டவனும் அதன்கீழிருந்து சிறந்த பயன்களை மரங்களைக்கொண்டு நல்கச்செய்து தானும் நல்கு கிறான். மலர் நிறைந்தது என்பதைக் காட்டத்தான், 'நிறை மலர் குருந்தம்' என்றார். மலர்தல் தனது நன்மைக்கும் பிறர் நன்மைக்கும் என்று தெரிந்துகொள்ளவேண்டும். சீர் - சிறப்பு, சீர் சிறப்பு. முன்னோர் தேடியதைப் பேணுவது 'சீர்'. அதற்கு மேலும் தானாகத் தேடுவது 'சிறப்பு'.

ஆதியே = ஆதிபகவன் ; ஆதி, காரணமாயிருப்பது.
ஆதி = உலகத்தை நடத்துவது.
பகவன் = தன்னுடன் (கடவுளிடம்) சேர்ப்பது.

அருமையாகக் கூப்பிடவேண்டும் என்ற கருத்தில் இனிமை யாக அழைத்தால்தான் அவ்வழைப்பு அன்பாகத் தோன்றும். அதுதான் இங்கே 'ஆதரித்தழைத்தால்' என்பதன் நுட்பம்.

அதெந்து = அஃது என்ன என்று அருளுடன் கேட்பது.
அருளாயே = எனக்கு வெளிப்பட்டருளவேண்டும்.

'அருளாய்' = என்றால் அருளாதே என்றல்ல; அருள் என்றுதான் பொருள். அருளாய் — அருள் — அருள்செய் என்பதாம்.

(தொடரும்)

மாலைப்பொழுதிலே

[செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை]

செந்தமிழ்த் தலைமைத் திருநகராம் நம் சென்னை நகரிலே! எம் அலுவலகத்திலே! ஒருவாறு வேலைகளை முடித்துக்கொண்டு, கடற்கரைக்குச் சென்று உலவிவர எண்ணிப் புறப்பட்டோம். அப்போது சாயுங்காலம் மணி ஐந்து. சூரியனும் தன் வேலையை முடித்துக்கொண்டு, தன் இருப்பிடம் செல்வான்போல் மேல் திசையின் கீழ்நோக்கி இறங்கிச் சென்றுகொண்டிருந்தான். நாங்கள் தெருக்களின் வழியோரமாக நடந்து சென்றுகொண்டிருந்தோம். தெருக்களோ எங்கட்குக் கடலாகக் காட்சியளித்தன. தார் ரோடு (கீல்கொண்டு மெழுகப்பட்ட வழி) கரிய நிறமாதலால் அது கடலின் நீராகவும், வானளாவிய கட்டிடங்கள், அதில் மிதந்து நிற்கும் பெருங்கப்பல்களாகவும், பலவகைப் பேரிரைச்சல்கள், அதன் ஓசையாகவும், மின்சார வண்டி (டிராம்) சிறு சிறு கப்பல்களாகவும், கார்கள் அதிற்செல்லும் படகுகளாகவும், இழுப்பு (ரிக்ஷா) வண்டி சிறு சிறு மிதப்புக்களாகவும், போவார் வருவார் ஆகிய மக்களும், மாடு, நாய், பூனை, கோழி முதலியனவும், அதிற் செல்லும் பல்வகை மீன்களாகவும், அதில் வாழும் வேறு பலவகை உயிர்ப் பொருள்களாகவும் எங்கட்குத் தோன்றின. இதுவும் கடல்தானே! அக்கடற்கரைக்குச் செல்வானேன் என எண்ண அலை தடுத்தது. ஆனால், மனம் கடற்கரைக்குச் சென்று வருமாறு தூண்டிற்று. சென்றுகொண்டே இருந்தோம்.

இடையில் இழுப்பு வண்டிக்காரர்கள் ஒருவர்பின் ஒருவராக முன்னும் பின்னும் வந்து 'ஓரம், ஓரம்'! என்று கூவிக்கொண்டு செல்வது ஒருபுறமும், 'பம்பம்ம்—ம்—ம்' என்ற ஒலியுடன் கார்கள் ஒருபுறமும், 'டொர்—டொர், டொர்ர்ர்ர்ர்' என்ற ஓசையுடன் மின்சார வண்டிகள் ஒருபுறமும் வந்து வந்து எங்கள் வழிச் செலவைத் தடுத்துக்கொண்டே வந்தன. நாங்கள் அந்தத் தடுப்பையும் கடந்து ஒதுங்கி ஒதுங்கிச் சென்றுகொண்டே இருந்தோம்.

வழிகளில் வீட்டுத் திண்ணைகளிலும், சலதாரை வழி ஓரங்களிலும் சட்டி முட்டிகளை ஒதுக்கி வைத்துக்கொண்டு, ஆங்காங்கே ஏழைமக்கள் பலப்பல குடும்பமாகச் சேர்ந்து ஆணும் பெண்ணுமாகக் கூடிச் சோறாக்கிக் கொண்டிருந்தனர்; அவர்கள் தெருக்களில் கிழிந்து கிடக்கும் துண்டுக் காகிதங்களையும் பழத் தோல்களையும் விறகாகக் கொண்டு, அடுப்பெரிக்கும்

காட்சியும், அவர்களுட் பெண்கள் குழந்தைகளோடு கொஞ்சி விளையாடுவதும், பாலூட்டுவதும், தாயும் குழந்தையுமாக அங்கணத்தின் (சாக்கடை) நீரில் கால்படப் படுத்துக்கொண்டு புன்னகையாடிக் கொண்டிருக்கும் காட்சியும் பிறவுங்கண்டு இரங்கி வருந்தத்தக்கதாகவே இருந்தன! குழந்தைகள் பாதைகளையே பாயலாகக்கொண்டு படுத்திருக்கும் காட்சியும், அவர்களில் கணவன் மனைவியர் 'செல்வமென்பது சிந்தையின் நிறைவே' எனக்கொண்டு, இன்முகத்தோடு புன்னகை செய்து, உரையாடி உரையாடிச் சமையல் செய்யும் காட்சியும், அவர்கள் பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்துறையும் காட்சியும், கண்ணிற் காணொணுக் காட்சியாகவே இருந்தன. பின்னரும் சென்றேம்.

கால் முடமானவர், கண்ணொளியில்லார், காதொலியற்றார், பிறர் இவ் வகையினரெல்லாம், எங்கள் பின்னர்த் தொடர்ந்து "ஐயா சாமி பிச்சை, கால் இல்லாதவனுங்க, கன்னில்லாதவனுங்க, ஏலயிங்க, தருமங்குடுங்க சாமி! உங்களுக்குப் புன்னியமா போவுது," என்றும், சில ஏழைப் பெண்கள் பிள்ளைகுட்டிகளுடன் வந்து "சாமி புல்லேகுட்டி பெத்த புன்னியவாங்கலே! இந்த ஏலே முகம்பாருங்க, குயந்தேக்குப் பாலுமில்லே தன்னில்லே கால்னு அரைனு தாங்க ஐயாங்கே," என்று வந்தனர். அனுவலகத்தினின்றும் போதரும் எங்களிடம் காசு ஏது? பணம் ஏது? அங்குநின்றும் கடந்தோம். பெருங்கடைத்தெரு வந்தோம். "சீப்பு சீப்பு அஞ்சனு வித்தது ரெண்டனு," என்னும் ஒலியும், "நல்ல துணி பட்டுத்துணி, கெசம் ஒன்னேகாரூபாய்," என்று வியாபாரிகள் கூவும் ஒலியும், "வாயைப்பயம் வாயைப்பயம், சாத்துக்கிடி சாத்துக்கிடி, லட்டு லட்டு நாலனு வித்தது ரெண்டனு ரெண்டனு ஒன்னரனு ஒன்னரனு," எனப் பழம் விற்கிற பெண்கள் பகரும் ஒலியும், பிற வியாபாரிகள் கூறும் ஒலியும் சென்னை நகரின் பெருமிதத்தை விளக்கின. அங்கங்கே கார்களில் மனைவி மக்களோடு வருவோரும், குதிரை வண்டியிற் செல்வோரும், இழுப்பு வண்டியில் போவோரும், மின்சார வண்டியில் போதருவோருமாகப் பலர் கடற்கரை நோக்கியே செல்வோராயிருந்தனர். நாங்களும் கால் வண்டிகொண்டு கடந்து கடற்கரையை அண்மினேம். கதிரவனும் தன் ஒளியை ஒடுக்கிக்கொண்டு மறைந்தான்.

அவன் மறைந்ததும் செவ்வானம் மேற்குத் திசையில் ஓங்கிப் பரந்து நின்றது. எம் மனத்தில் மாலைப்பொழுதை வடித்த ஓவியப் புலவர் பலர் வந்து வந்து காட்சி தந்து மறைந்தனர். காக்கைகள் "காகா" எனக் கத்திக்கொண்டு தம்தம் இருப்பிடம் நோக்கிப் பறந்துகொண்டிருந்தன. நாரை

கள் கொக்குகள் சாரைசாரையாகச் செவ்வானத்தின்மேற் படையெடுத்துச் செல்வனபோலப் பறந்து போய்க்கொண்டிருந்தன. காக்கைகள் கருநிறமாதலின் தம் இனமாகிய இருள் வருகையை எதிர்நோக்கி அழைப்பதற்குச் செல்வன போலவும் இருந்தன.

நாரைகள் கொக்குகளின் நிறம் வெளிறிய செம்மையும் வெண்மையுமாதலின், தம் இனமாகிய மாலையினையும் வெண்ணிலவையும் வரவேற்கப் போவனபோல் தோன்றின. இவைகளைப் பார்த்துக்கொண்டே கடற்கரை ஓரமாக அமைந்துள்ள தோட்ட ஓரங்களில் போய்க்கொண்டிருந்தோம். அத்தோட்டங்களில் உள்ள பலவகைப் பூச்செடிகளில் மஞ்சள்நிறச், செந்நிற வெண்ணிற, பன்னிறமுள்ள பல்வகை மலர்கள் மலர்ந்து, தேன் துளிக்கக் காட்சியளித்துக்கொண்டிருந்தன. அவைகள் கடற்செல்வி எங்கள் வருகையைக் கண்டு மகிழ்ந்து இன்பக்கண்ணீரரும்ப அகமுகமலர்ந்து வரவேற்பனபோலத் தோன்றின.

எதிர்ப்பக்கம் நோக்கினோம்; ஆங்கே நின்ற கோலமாக **தமிழ்ப் புலவர், டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள்** உருவச்சிலை காட்சியளித்தது; அச்சிலை கடலை நேர் நோக்கியவண்ணமாக அமைக்கப்பட்டுள்ளது. அக்காட்சி 'நாட்டிலுள்ள பழைய தமிழ் ஏட்டையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் மக்கட்கு அழியாச் செல்வமாகத் திரட்டித் தந்தேம்; இன்னும் எஞ்சின கடலினும் இருக்கலாம்; அவைகளையெல்லாம் தேடித்தருவோ'மென முனைந்து எண்ணிக்கொண்டு நிற்பார்போல் தோன்றிற்று. 'வாரணம் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரும் மாள' என்ற உரையை எண்ணிப் பணியாற்றியவர்களன்றோ? என எண்ணினோம்.

பின்னர்க் கடற்கரை கடந்து, உள்ளே கடலின் மணல் பரந்துள்ள இடத்துக்குச் செல்ல எண்ணிச் சென்றோம். ஆங்கே கால் ஊன்றி மேலே பலகை ஒன்றை இணைத்து அறிவிப்புப் பலகை ஒன்று சுறுமீன் செதுக்கிய வடிவுடன் காணப்பட்டது. அதன் மீது, "**அபாயம்—சுராமீன், கடலில் ஸ்நானம் செய்பவர்க்கு சுராமீனினால் ஆபத்து ஜாக்கிரதை,**" என்று எழுதப்பட்டிருந்தது. சுறு, சுரா ஆவது தமிழ் வழக்கன்று என வியப்பெய்தினோம். ஸ்நானம்......ஜாக்கிரதை முதலிய பல தமிழல்லாத வேற்றுச் சொற்கள் காணப்பட்டன. அதைக் கண்டு திடுக்கிட்டேம். என்னே! தமிழ் நாட்டில்—தமிழர் தலைநகரில்—இரண்டொரு சொல்தொடரில்—இவ்வளவு பிழையுடனும், தன்னுணர்ச்சியின்றியும் எழுதப்பட்டிருக்கின்றதே என எண்ணி

னேம். இங்குப் புலவர்கள் இல்லையா! கழகங்கள் இல்லையா! என்ன காலம்! இதைத் திருத்தித் தமிழ்ச் சொற்களால் எழுதக் கூடாதா? ஆ! உலகங்கண்ட தமிழ் நாடே! மீன் புலி விற் கொடிகளை இமயத்தின் நெற்றியில் வெற்றியுடன் எழுதிய தமிழ் நாடே! உலகெங்கும் அறநெறிக் கதிரொளிகாலும் காளாமணி விளக்காம் திருக்குறள் பிறந்த தமிழ் நாடே! இன்பப் பெட்டகங்களாம் சங்கநூற் கருவூலங்கண்ட தமிழ் நாடே! நீ யாண்டுளாய்! யாண்டுளாய்! என வினவினேம். எழுந்தது நடுநிலை, தமிழர்க்குத் தன் மானமில்லையென விடையிறுத்து. உள்ளே சென்றேம்! அங்குப் பல கடைகள் விரிக்கப்பட்டிருந்தன. சீப்பு, கண்ணாடி, தடுக்கு, புத்தகங்கள், உண்பண்டங்கள், சிறுவர்க்கான விளையாட்டுக் கருவிகள், பிற யாவும் விற்றுக்கொண்டிருந்தனர் பற்பல வியாபாரிகள். அதனுள் குளிப்புநீர்த் தடாகமும், சிற்றுண்டிச்சாலையும், படிப்பு நிலையமும், சிறார் விளையாடும் இடங்களும், ஆங்கே ஊஞ்சல்களும், பிறவும் காணப்பட்டன. கண்டு மகிழ்வெய்தினேம்.

ஆங்காங்கே இளமை நலம் மிக்க ஆண்களும் பெண்களும் அணி, அணியாக வருவதும் போவதுமாகக் காட்சியளித்தனர். அக்காட்சி வானத்திற் செம்மையும் வெண்மையும் ஏனைய நிறமுங்கொண்டு திரள் திரளாக இருக்கும் சிறுசிறு மேகத் திரள் மணற் கொழித்திருப்பதுபோலத் தோற்றிற்று. ஆண்கள் காலிற் பலவகைச் செருப்புக்களணிந்து கால் சட்டை மேற் சட்டை பூட்டியும் மூக்குக் கண்ணாடியணிந்தும் வந்தனர். பெண்கள், கூந்தலை வாரிச் சடைப் பின்னியும், வெட்டிவேர் போல் பரப்பிச் சிதறிக் கட்டித் தொங்கவிட்டும், தலைமுடிமேல் கனகாம்பரம் முதலிய மணமற்ற பன்னிற மலர்களைச் சூடியும் வந்தனர். அது முகமதிக்கு அஞ்சி இருட்கூட்டம் பின்புறம் போய் ஒளிந்துகொண்டு கீழிறங்கிச் செல்வதுபோல் தோன்றிற்று. அவர்கள் காதணி, கண்ணணி, மூக்கணி, கையணி, விரலணி பூண்டும் காலில் தொடுதோலணிந்தும் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வந்தனர். அவர்கள் தலைமுடிமீது முல்லை, மல்லிகை முதலிய மணமுள்ள பூக்கள் வந்திருக்கும் சிறப்பை யிழந்து செடிகளிலேயே பூத்துச் சிரித்துக்கொண்டிருப்பவாயின.

முற்காலத்து இலக்கியங்களில் வரும் 'தாழிக் குவளை சூழ் செங்கழுநீர்' 'அல்லியங் கோதைநல்லார் அன்புடன் வளர்த்த முல்லை' என்ற சொற்களெல்லாம் பகற்கனவானவே எனக் கருதினேம். மேற்கூறிய தோற்றங்களுடன் துணைவரோடு தொடர்ந்து வந்தனர்; காதலரோடு கூடி வந்தனர்; கவலைக்கை

நெகிழாது கண்ணும் முகமும் அகமும் மலர மகிழ்ந்து வந்தனர். சிலர் மதுரைவீரன் கொண்டைபோல் காதுப் பக்கத்தில் கூந்தலைச் சுருட்டிச் செருகிக் கட்டியிருந்தனர். பலநாட்டு ஆணும் பெண்ணும் ஆங்காங்கே வருதலால் பலவகையினராக எமக்குக் காட்சியளித்தனர். முதிர்ந்த அகவை யெய்திய கிழவர்களும், நரையென வெளிறிய தாடியுடன் குனிந்து, கோலே காலாக ஊன்றிக்கொண்டு, தள்ளாடித் தள்ளாடி நடந்துவந்தனர்; கிழவிகள் சுரித்த தோலும், நரைத்த தலையும், தொங்கிய இதழும், நுங்கியல் கண்ணுமாகத் தோற்றமளித்து, வேற்கண் கெட்டு கோற்கண்ணராகப் பலர் வந்தனர். இக் காட்சிகளை யெல்லாம் பார்த்துக்கொண்டு கடல்நீர் வந்து வந்து செல்லும் கரைமேல் சீனியும் அவலும் கலந்ததை யொப்ப உடைந்த கிளிஞ்சில்களோடு விரவிக்கிடக்கும் நுண்மணற் பரப்பில் உட்கார்ந்து களைப்பாறிக் கடல்அலைகளை நோக்கிக் கொண்டிருந்தோம்.

அங்குப் பலர் கிழிந்த கந்தல் உடையுடனும், எண்ணெய் கண்டறியாத தலையுடனும், வற்றியுலர்ந்த உடலுடனும் காட்சி யளித்து ஆணும் பெண்ணுமாக வறுமைக் கோலத்தைக் காட்டிக்கொண்டு எங்கள் பக்கலில் அமர்ந்தனர். எங்கட்குச் சிறிது அதிற் கவனஞ் சென்றது. ஆ! இவ்வுலகம் என்ன உலகம்! செல்வர்பலர் களிப்புடன் வாழவும், வறியவர்கள் பசித்தபோது உண்ண உணவின்றி, இருக்க இடமின்றிப் படுக்கப் பாயின்றி வாடி வதங்கவும் படைக்கப்பட்டிருக் கின்றது. அதினும் நம் நாடு உரிமை பெற்ற நாடன்றோ? “தனியொருவற்கு உணவில்லை யென்னிற் சகத்தினை யழித் திடுவோம்,” என்று முழக்கஞ்செய்த நாடன்றோ? என எங்கட்கு எண்ண அலைகள் கிளம்பிக் குமுறிக்கொண்டிருந்தன. என் செய்வது? ஆட்சிக்கோல் இவ்வாறிருக்கும் போலும்! எனக் கருதினேம்! ஆய்ந்தோம்! நல்லார்க்கும் பொல்லார்கரும் நடுநின்ற ஒருவனன்றோ? அவனுக்கு ஏன் இந்த வேறுபாடு. ‘ஒரு கண்ணில் வெண்ணெயும் ஒரு கண்ணில் சுண்ணும்புமா’ எனக் கருதினேம். மேடுபள்ளம் இருக்கும்வரை இவைகளும் இருந்தேதான் தீரவேண்டுமென எண்ணினோம். ‘ரஷ்யாவில் பொதுவுடைமை என்கிறார்களே, அங்குப் பசியில்லையாம், பட்டினியில்லையாம், வேலையுண்டாம், எல்லோரும் ஒரு குலமாம், எல்லோரும் அந்நாட்டு மன்னர்களாம்,’ எனக் கேள்விப்படுகி றோமே, என நினைந்தோம். அஃது உண்மைதான். ஆனால், ஒன்று; எல்லோரும் அரசர்களானால் தொழில் எவ்வாறு நடைபெறும்? உலகம் நடவாவிட்டால் ஒன்றும் நடவாதன்றோ?

அங்கும் ஸ்டாலின் அரசராக இருக்கிறார். பெயர் தான் தனியாட்சி. குடி அரசு - முடியரசைப்போலத் தான் அவர், (சர்வாதிகாரம்) செலுத்துகிறார் என நினைந்தோம்.

ஏர் பிடித்து உழுபவர் எல்லாம் அரசராக இருந்தால் வேளாண்மை யார் செய்வது? குப்பை கூளம் வாருவோரெல்லாம் எய்ப்பிலேமென இருந்தால் அவ்வேலை எங்ஙனம் நடைபெறும்? எல்லாவற்றிற்கும் பொறி (இயந்திரங்)களால் செய்யலாமென்றால் அதைச் செய்தற்கும், செய்வதைத் தூண்டி நடத்துதற்கும் ஆள் வேண்டுமன்றோ? ஆகலான் உலகம் அவ்வத்தொழிலை நடத்திச் செல்வதற்கு உயர்வும் தாழ்வும், எக்காலமும் இருந்தே தீரும். அஃது இயற்கை இயற்கையென எண்ணினோம்.

"வளம்பெற வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போகம் அவரவர் ஆற்றால்
விளங்காய் திரட்டினார் இல்லை களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல்." (நாலடி - க0௩.)

என்ற நாலடிப் பாட்டு வந்து எங்கட்கு நாலடியைப் பனீரென்று கொடுத்தது. ஓகோ! உண்மைதானெனத் தெளிந்தோம்.

அன்று நிறைநிலாக் காலம். கீழ்த்திசையில் திங்களஞ் செல்வன் தோன்றி வெள்ளி வெண்குடத்திலிருந்து பாலைச் சொரிவதுபோலத் தண்ணிலாக் கதிர்களை யெங்கள்மீதும் கடல் மேலும் அள்ளி வீசிக்கொண்டிருந்தான். கடலில் அலைகள் வருவதும் போவதும் வெள்ளிய நிறத்துடன் திரண்டு வருவதும், நிலாவொளி அதன்மீது பாய்ந்தொளிர்வதும் கண்ணுக்கு இன்பத்தைத் தந்தன. அதன் பரந்த வடிவைக் காணுந்தோறும் அளப்பொணு விரிவுடன் இருந்ததால், அதைக்கண்டு வியப்பு எய்தினோம். இதனால்தான் "பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின், நன்மை கடலின் பெரிது" (திருக்குறள்: க0௩.) எனவும், 'கடலன்ன காமம்' (திருக்குறள்: ககங௭.) எனவும், 'கல்விக்கடல், செல்வக்கடல், அருட்கடல், அன்புக்கடல்' எனவும் அளப்பில்லாத பொருள்களைக் குறிப்பதற்கும் கடலைக் கொண்டேவரும் தொடர்களை எண்ணி எண்ணி இன்பெய்தினோம்.

"தூய மலர்போல் நுரைத் தொகையும் முத்துஞ் சிந்திப் புடைசுருட்டிப்
பாயல் உதறிப் படுப்பதே ஒத்த திரையின் பரப்பு"
(கம்ப. உயு. கடல்.)

என்ற கம்பநாடர் கடல் வருணனை கருத்தில் தோன்றிக் காட்சியளித்தது. "தென்றற் காற்று மெல்லெனத் தவழ்ந்து, பொங்கரின் நுழைந்து; வாவி புகுந்து; பங்கயந் துழாவி; பைங்கொடி

மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவி; கொங்கலர் மணங் கூட்டுண்டு; குளிர்ந்து; மெல்லென்று; அங்கங்கே கலைகள் தேரும் அறிவன்போல்'' வந்து வந்து எங்கள் மேனியைத் தீண்டி, ஆடையை அசைத்து கடனீரைச் சிறுசிறு பனித்துளியாக்கி எங்கள்மேல் சிதறி விளையாட்டுச் செய்துகொண்டிருந்தது. அது தென்றற் செல்வக்குழந்தையல்லவா? அக்குழந்தை இன்பத்தில் திளைத்துக்கொண்டிருந்தோம். மணியும் ஏழரை ஆயிற்று. வந்திருந்தோர் அனைவரும் சிறிது சிறிதாகக் கலைந்து செல்லத் தொடங்கினர்.

குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்களை, உக்கலில் இடுக்கிச் செல்வோரும், நடக்கவிட்டுப் பார்த்துச் செல்வோரும், மெல்லச் செல்வாரும், விரைந்து செல்வாருமாகச் சென்றனர். யாங்களும் எங்கள் இருக்கைக்குச் செல்லப் புறப்பட்டோம். நிலவுச் செல்வனும் இருள் எங்கே எங்கேயென்று விரட்டிச் செல்வான்போல் மேலே ஏறிச் சென்றுகொண்டிருந்தான். நாங்களும் இருக்கை சேர்ந்தோம்; கால்கை கழுவிக்கொள்ளத் தண்ணீர்த் தொட்டிக்குச் சென்றோம்; தொட்டியில் நீர் இல்லை. அங்கே குழாயிலிருந்து நீர் சிறிது சிறிதாக விழுந்துகொண்டிருந்தது. திருகித்திருகிப் பார்த்தோம். முன் விழுந்ததைவிடக் குறைவாக நீர் வந்ததேயன்றி மிகுதியாக நீர் வரவில்லை. அது ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு இவ்வளவுதான் கூலியென்று அளவுபடுத்திய தொழிலாளியின் வருவாய்போல் எங்கட்குத் தோன்றியது. தொட்டியில் நீர் விழவிழ எடுத்து எடுத்துத் தொட்டி நிரம்பாதவாறு நீரைச்செலவுசெய்வதுபோல, வருவாய் வரவர வீட்டுச் செலவுகளும், எஞ்சினால் சினிமா, நாடகம், முதலிய ஏனைய சிறுசிறு செலவுகளும் வந்து தொழிலாளிக்குக் கையில் காசு சிறிதும் இல்லாமற் செய்வதுபோல் இருக்கின்றதென நாங்கள் எண்ணுமாறு தொட்டி காட்சி தந்தது. கால்கை கழுவிக்கொண்டு, அட்டில் புகுந்து உணவருந்தி வந்து சிறிது நேரம் உரையாடிக்கொண்டிருந்தேம். பொத்தென்று மணி பத்தடித்தது கடிகாரம். துயிலும் காலமும் வந்ததெனப் படுக்கை விரித்துத் துயின்றோம். கண்படைச் செல்வி மெல்ல மெல்ல எங்களைத் துயிற்றினாள். நன்கு துயின்றோம்.

இரவு போயிற்றுப் போலும்! பகல் வருகின்றதுபோலும்!

“ குக்கூ என்றது கோழி அதனெதிர்
துட்கென் றன்றென் தூய நெஞ்சம்
* தோள்தோய் காதலர்ப் பிணிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே ”

(குறுந்தொகை: ௧௫௭.)

* தோள்தோய் காதலர்: ஈண்டுத்தூக்கம்.

'காகா' என்ற குரலோடு காக்கைகள் கத்திக்கொண்டெழுந்தன. 'டங்டங்' என்று கடிகாரம் மணி ஐந்தடித்தது. துண்ணெனத் துடிப்புற்று எழுந்தோம். 'கொத்தமயி, கொத்தமயி, காயிபிலே, காயிபிலே (என்பது சென்னையில் கொத்தமல்லித் தழையையும், கறிவேப்பிலைத் தழையையும் விற்கிற பெண்கள் கூவும் குரல்) 'பல்ப்பொடி பல்ப்பொடி' என்ற அவை விற்பார் ஒலிகள் எழுந்தன. கதிரவனும் பொற்குடம்போற் கீழ்பால் தோன்றிப் புறப்பட்டான். உணவு விடுதிகள் திறந்து பல்வகை உணவுப் பொருள்கள் செய்து பரிமாறினர்; உண்போர் பலர் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாக உணவு விடுதிகள் வரவேற்கப் போந்தனர்; உண்டனர்; அவ்விடுதிகள் வருவார் போவார் மிக்கு மிக்குப் பெருகிவருவதாலும், இடைவிடாது ஆங்கே வாளொலியில் பல்லியம் முழங்குவதாலும், அவை மணவிழா நிகழும் பேரில்லமாகத் தோற்றமளித்தன. கூலவணிகர், அறுவை வணிகர், பண்ட வணிகர், அப்ப வணிகர், அடைக்காய் வணிகர், மெல்லிலை வணிகர், காய்கறி வணிகர் முதலிய வணிகத் துறையாளரெல்லாம் தத்தம் கடைகளைத் திறந்து நறும்புகை புகைத்து இறையை வணங்கித் தம்தம் பொருள்களை விலைபகர்ந்து விற்பாராயினர். நாங்களும் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு சிற்றுணா உண்டு, சுடுநீர் பருகி, அலுவலகம் நோக்கிச் சென்றேம். இவ்வாறே பலப்பல நாட்கள்.

" பெருங்கடல் முழங்க ; கானல் மலர :
இருங்கழி ஓதம் இல்லிறந்து மலிர ;
வள்ளிதழ் நெய்தல் கூம்ப ; புள்ளுடன்
கமழ்பூம் பொதும்பர்க் கட்சி சேர ;
செல்சுடர் மழுங்க ; சிவந்துவாங்கு மண்டிலம்
கல்சேர்பு நண்ணிப் படரடைபு நடுங்கப்
புலம்பொடு வந்த புன்கண் மாலை."

(நற்றிணை: ககஎ.)

" புன்கண்ணை வாழி மருள்மாலை " (திருக்குறள்: கஉஉஉ).

வாழ்க ! வருக ! வென வாழ்த்துகின்றேம் இம்மாலைப்பொழுதை.

பாணர் கைவழி

[திருமந்திரமணி, துடிசைகிழார், அ. சிதம்பரனார்]

"பாணர் கைவழி" என்னும் யாழ்நூலை எனது நண்பர் கோவை வேணுகான விசாரத T. R. வேணுகோபால் நாயுடு கொடுக்கப் படித்து மகிழ்ந்தேன்.

ஆயிரம் நரம்புகளையுடைய ஆதியாழ் முதல் ஒரே நரம்பை யுடைய வில்லியாழ் வரை, பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டில் பலவகை யாழ்க் கருவிகள் வழக்கத்தில் இருந்தன. இப் பலவகை யாழ்க் கருவிகளிலும் சிறப்பாக எல்லோராலும் கையாளப்பட்டு வந்தன நான்குவிதமான கருவிகளாகும். அவை:—

1. பேரியாழ் (21 நரம்பு)
2. மகரயாழ் (19 நரம்பு)
3. சகோடயாழ் (14 நரம்பு)
4. செங்கோட்டியாழ் (7 நரம்பு)

என்பனவாம். இந்நான்கு கருவிகளிலும் அதிகமாக மக்களிடைப் பழக்கத்தில் இருந்ததும் இருக்கிறதும் செங்கோட்டு யாழேயாகும்.

தமிழ்ச்சங்கங்கள் நடைபெற்று வந்தபோது, இயல்—இசை நாடகம் என்ற முத்தமிழ்களையும் ஆராய்ந்து, இசைக்குரிய பண் களையும், இசைக்கருவிகளையும் மக்கள் காப்பாற்றிவந்தார்கள்.

கடைச்சங்கம் கி. மு. 1715 முதல் கி. பி. 235 வரை நடை பெற்றது.

கி. பி. 235-க்குப்பின் சங்கம் நடைபெறாததற்குக் காரணம், தமிழ்நாட்டின்மீது சமணமதத்தை அனுசரித்த பல்லவர்—வடுகக் கருநடர் முதலியவர்களுடைய படையெடுப்பேதான் என்பது சரித்திரம் கண்ட உண்மை.

தொண்டைநாடும்—சோழநாடும் பல்லவர்களிடம் கி. பி. 225 முதல் கி. பி. 880 வரையிலும்—பாண்டியநாடு வடுகக் கருநடர்வசம் கி. பி. 235 முதல் கி. பி. 520 வரையிலும், அகப் பட்டு அல்லலில் மூழ்கி இருந்தன.

சமணர்கள் துறவறநெறியில் மோகங்கொண்டு, இசையும், நாடகமும் துறவறத்துக்கு இடையூறுகள் எனக் கருதி, அந்த இரு தமிழ்க்கும் ஆதரவு கொடுக்காமலும், அவ்விரு தமிழ்க்கும் உரிய இலக்கண இலக்கியங்களை நெருப்புக்கு இரையாக்கினார்கள். அரசாட்சி முறையில் உள்ளவர்கள் இசையையும் இசைக்கருவி களையும் வெறுக்கிறார்கள் என்று தெரிந்தால், மிகுந்த உழைப் புடன் பழகி வாசிக்கக்கூடிய பேரியாழ், மகரயாழ், சகோடயாழ்

ஆகியவை மக்களிடை வழங்குமா? வழங்காது. ஆதலால், மக்கள் எளிதில் சிறுமுயற்சியுடன் வாசிக்கக்கூடிய செங்கோட்டு யாழ் என்ற சீறியாழே மக்களிடை வழக்கத்திலிருந்தது. (சீறி யாழ்=சிறுயாழ்).

சமணமதத்தை அநுசரித்த அதிகாரிகளுக்கு 'யாழ்' என்ற பெயரே வெறுக்கத்தகுந்ததாக இருந்தபடியால், தமிழர்கள் அவ்வெறுப்பையும் வளர்க்க விரும்பாமல் யாழுக்கு மறு பெயரான வீணை என்னும் பெயரை இட்டு, யாழின்பேரில் இருந்த வெறுப்பை ஒருவாறு நீக்கிக்கொண்டார்கள்.

பல்லவர்களும் வடுகக்கருநடர்களும் வடமொழிப்பற்று மிக்குடையவர்கள். அவர்கள் காலத்தில்தான் காஞ்சியிலும் மதுரையிலும் வடமொழிப் பட்டி மண்டபங்கள் ஏற்பட்டு அவர்களுடைய ஆட்சிக்காலம்வரை நடைபெற்றுவந்தன. அப்பட்டி மண்டபங்களின் உறுப்பினர்கள் அரசியல் உதவிபெற்று, இந் நூல் 55—56 பக்கங்களில் கண்டபடி, தமிழ் மொழியிலுள்ள பெயர்களை எல்லாம் வடமொழியில் மொழிபெயர்த்தார்கள். உலகத்தில் எந்த நாட்டிலும் வழக்கத்தில் இல்லாத ஒரு புது முறையைக் கையாண்டு தமிழ்ச் சிறப்புப்பெயர்களையும் மொழி பெயர்த்தார்கள். இவ்வழக்கம் எம்மொழியிலும் எந்த நாட்டிலும் இல்லை.

உதாரணமாக 'வெள்ளைக்கிணர்' என்ற ஊர்ப்பெயரை ஆங்கிலேயன் 'White-well' என்று மொழிபெயர்க்காமல் Vellak-Kinar என்று எழுதிவந்தானேயொழிய வேறின்று. ஆனால், வடமொழியாளரோ என்றால், 'மறைக்காடு' என்ற ஊர்ப்பெயரை மறைக்காடு என்றே வடமொழியில் எழுதிக்கொள்ளாமல், 'வேத ஆரணியம்' என்று மொழிபெயர்த்தார்கள். இப்படியே பலவுங் காண்க.

இந்தமாதிரி மனப்பான்மையுள்ள காலத்திலேதான் செங்கோட்டு யாழையாவது காப்பாற்றுவதற்கு வடமொழிப்பெயர் மாதிரி ஒலிக்கும் பழைய தமிழ்ப்பெயரான வீணை என்னும் பெயரை அவ் யாழுக்குச் சூட்டினார்கள். அப்படிச் செய்ததானது அன்னாருக்கு நிம்மதியை அளித்தது கண்கூடு.

வீணை என்ற சொல் 'விண்' என்னும் பகுதி அடியாகப் பிறந்த சொல். விண்=ஒலி என்னும் பொருளது. விண்—விண் என்று ஒற்றுக்குத்தக ஒலித்துப் பண்களை இசைப்பது வீணை. (விண் விண் எனல்=இசைக்குறிப்பு ஈரடுக்குமொழி—யாழ்ப் பாண அகராதி).

உடம்பிலுள்ள முதுகெலும்புக்கு 'வீணாதண்டு' என்று பெயர். ஏன் அப்பெயர் முதுகெலும்புக்கு வந்தது?

"கோணு மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி,
வீணாத் தண்டூடே வெளியுறத் தானோக்கி,
காணுக்கண் கேளாச் செவிஎன் றிருப்பார்க்கு" (திருமந்திரம்-568)

என்றபடி, பொறைநிலை (தாரணை) அடைந்து, சித்தத்தை ஒரு வழிப்படுத்தி, வீணாத்தண்டூடே செல்லும் சுழுமுனை நாடியில் நினைவை இருத்தி, நினையவல்லவர்கள் (தியானிப்பவர்கள்), பத்து விதமான இசைகளை (நாதங்களை)க் கேட்பார்கள். அவ்விசைகளாவன :—

"மணி—கடல்—யானை—வார்குழல்—மேகம்
அணிவண்டு—தும்பி—வளை—பேரிகை—யாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்" (திருமந்திரம்-586)

என்பனவாம்.

இப் பத்துவிதமான இசைகள் முதுகெலும்புத்தண்டு மூலமாகக் கேட்கப்படுவதால் அத்தண்டுக்கு 'வீணாத்தண்டு' என்று தமிழ்நாட்டுச் சித்தர்கள்—யோகிகள்—ஞானிகள் பெயரிட்டார்கள்.

முதுகெலும்புத்தண்டுக்கு உட்புறத்தில் ஒலி நரம்புகளும் (Sound Nerves), ஒளி நரம்புகளும் (Glowing Nerves) உண்டு. அதுபோல, செங்கோட்டியாழ் என்ற வீணைக்கும் ஒற்றுறுப்பு நரம்புகளும், பண்மொழி நரம்புகளும் உண்டு

முதுகெலும்புக்கு 33 எலும்பு வளையங்கள் (Vertebrae) உண்டு. அவைகளைத் திவவுகள் என்று வைத்துக்கொள்ளலாம் அதுபோல், வீணைத்தண்டுக்கும் திவவுகள் உண்டு முதுகெலும்பின் திவவுகளை (Vertebrae)ப் பார்த்துத்தான் யாழுக்குத் திவவுகள் வகுத்தார்கள.

தொல்காப்பியரும் தமிழில் இருந்த 51 ஒலிகளை, 33 ஒலிகளாக அமைத்துள்ளதை நோக்குக. இப்போது தமிழில் உள்ள ஒலிகள் முதலெழுத்து ஒலிகள் முப்பதும், சார்பெழுத்து ஒலிகள் மூன்றும் ஆக முப்பத்துமூன்றேயாகும்.

பேரியாழுக்கு ஒருகாலத்தில் 1000 கோல்கள் (திவவுகள்) உண்டு என்று நூல்களால் அறிகிறோம் பிறகு, இருக்க இருக்கக் குறுகி, 33 ஆகி, பின் 24 ஆகி, பின் 16 ஆகி, கடைசியாக 9-ல் வந்து முடிந்துள்ளது.

ஆனால், சில இசைவாணர்கள் 16 கோல்களும், 24 கோல்களும் கொண்ட வீணையைக் கையாண்டுவருகிறார்கள்

ரியர்—இராவணனை முதலியோரா கையாண்டது 33 கோல்களையுடைய யாழ்க்கருவி என்று வடிக்க நூல்கள் இடம் தருகின்றன.

மிடற்றுக்கு வீணை—சாரீரம்—சாரீர வீணை—கழுத்து முதலிய பல பொருள்கள் உண்டு. மிடற்றினுள் இசை நரம்புகள் பல இருக்கின்றன என்பது உடல்நூல்வல்லார் கூற்று.

மிடறானது விண்ணித்துப் பாடுவதற்குக் கருவியாய் இருப்பதால், வீணை என்ற பெயரைப்பெற்றது.

"யாழும் மிடறும் உடன் நிகழ்ந்த இசையே வீணை என்றும், தனித்த மிடற்றிசையும் வீணை என்றும், வீணைப் பாட்டுக்குக் கருவி யாழ் ஒன்றே தகுந்தது," என்றும் பேசப்படுவதைத் தமிழ் நூற்களில் காண்கின்றோம்.

மிடற்றுக்கும் யாழுக்கும் வீணை என்ற பெயர் பொதுவாக இருந்தாலும், மிடறு உயிருள்ளது, யாழ் உயிரற்றது; அதனால், யாழ் சில குறைபாடுகளை உடையது என்பது சொல்லாமலே விளங்கும். மிடற்றில் பேசக்கூடிய வலிவு—மெலிவு—இழைப்பு—நெகிழ்வு—அதிர்வு—உதிர்வு முதலியவைகளில் சிலவற்றை யாழில் வாசிக்கமுடியாது.

யாழ் வாசிப்பதில் புகழ்பெற்ற திருநீலகண்டயாழ்ப்பாணர் திருஞானசம்பந்தசுவாமிகள் பாடிய 'யாழ்மூரி'ப் பதிகத்தைத் தம்முடைய யாழில் இழைத்துப் பாடமுடியாமற் போகவே, அவர் தம் கையில் இருந்த யாழை உடைத்து எறியப்போக, திருஞானசம்பந்த சுவாமிகள் தடுத்து, "யாழினுடைய திறம் அவ்வளவுதான்; அது உயிரில்லாத பொருள். மிடற்றில் பேசக்கூடியவைகளை எல்லாம் அதில் வாசிக்க முடியாது. இயலாத இடத்தில் மிடற்றைக்கொண்டு இழைத்துப் பாடி நிறைவு செய்யவேண்டும்," என்று கூறியது நோக்கத்தக்கது.

அதனாலேயே, யாழும் மிடறும் இணைந்து, இழைந்து, இசைக்க உதவும் கருவியே (யாழே) வீணையாகும் என்பது வெள்ளிடைமலை.

மிடறு யாழுடன் சேராத காலத்தில் அக்கருவிக்கு 'யாழ்' என்று பெயர்.

மிடறு யாழுடன் சேர்ந்தகாலத்தில் "வீணை" என்று அக்கருவி பெயர்பெறுகிறது.

ஆதலின், யாழ் வேறு—வீணை வேறு அல்ல. மிடறோடு தொழிற்படும்போது வீணை—தொழிற்படாதபோது யாழ் என்று கொள்க.

யாழ் என்ற தமிழ்ப் பெயரை விரும்பாத வடமொழிப் பற்றுடைய அரசாங்கத்தார்க்கு மகிழ்வு உண்டாகும்படி வீணை என்ற பெயரையே கி. பி. மூன்றும் நூற்றுண்டுமுதல் தமிழர்கள் யாழுக்கு இட்டு வழங்கினர்கள். சங்க நூல்களில் இருந்து யாழின் உறுப்புக்கள் 18 என்று இந்நூல் ஆசிரியர் 78-ம் பக்கத்தில் கூறியுள்ளார். அவ்வுறுப்புக்கள் அவ்வளவையும் தன்னிடம் கொண்டு விளங்குவது தற்காலம் நாம் வீணை என்று கூறும் கருவியேயாகும்.

ஆதலால், நாம் மேலே கூறியபடி சில காரணங்களால் நம்மவர் யாழ் என்ற பெயரை மாற்றி, வீணை என்ற பெயரை இட்டார்களே ஒழிய, யாழ்தான் வீணை—வீணைதான் யாழ் என்பது என்னுடைய முடிவான கருத்து.

ஆதலின், இனிமேல் நாம் அக்கருவியை மிடற்றேடு தொழிற்படுத்தியபோது வீணை என்றும், மிடற்றேடு தொழிற்படுத்தாதபோதும், சும்மா வைத்திருக்கும்போதும், யாழ் என்றும் கூறுவோமாக.

உண்மை இவ்வாறு இருக்கச்
இசையாராய்ச்சிப் புலவர்களில் சிலபேரும், செங்கோட்டு யாழினுடைய உருவத்தை வில்மாதிரி வளைத்துக்காட்டி உள்ளார்கள்.

கோடு—என்னும்சொல்லுக்கு மரக்கொம்பு—வளைவு முதலிய 19 பொருள்கள் அகராதியில் கூறப்பட்டுள்ளன. அவைகளில் வளைவு என்ற பொருளை மனத்திற்கொண்டு யாழின் கோட்டை (தண்டை) வளைவாகக் காட்டிச் சித்திரித்தும், கோவில் மதிற் சுவர்களில் செதுக்கியும் வைத்துள்ளார்கள். அவையெல்லாம் உண்மையறிந்தவர்களால் செய்யப்பட்டவை அல்ல. கோடு என்ற சொல்லுக்கு அவர்கள் கொண்ட மயக்கப்பொருளே காரணமாகும்.

யாழ் உறுப்புக்களில் வணர் என்ற பாகம் வளைந்திருக்குமே யொழிய, தண்டு (கோடு) என்ற பாகம வளைந்த உருவத்தை யுடையதல்ல. முதுகெலும்பாகிய வீணைத்தண்டிலும் தண்டு நேரே உள்ளது காண்மின். குதத்திலுள்ள (Sacrum) முதுகெலும்பின் பாகமே வணர்போல் சற்று வளைந்துள்ளது நோக்கத்தக்கது. உடம்பின் உறுப்புக்களை நோக்கித் தத்துவங்களை உணர்ந்து, இசைக்கருவியாகிய யாழை நம்முடைய பெரியார்கள் அமைத்துளளார்களே ஒழிய, மனம்போனவாக்கில் அவர்கள் அதை அமைக்கவில்லை என்பதனைத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். யாழுக்கும் உடலுக்கும் உள்ள ஒற்றுமை

களைக் கூறிக்கொண்டே போனால் அதுவே ஒரு தனி நூலாகும் என்று இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

மாணிக்கவாசகர் முதலியோர் "இன்னிசை வீணையர்—யாழினர் ஒருபால்," என்று யாழ் வேறாகவும் வீணை வேறாகவும் கூறியிருக்கிறாரே! இரண்டும் ஒன்றாயிருந்தால் பிரித்துக் கூறுவானேன்? என்பீராகில், அவர் கொண்ட கருத்து இப்போது நாம் நினைக்கிறபடி அல்ல. அவர் கூற்றைக் கூர்ந்து நோக்குக. வீணையர் என்ற சொல்லின்முன் இன்னிசை என்ற அடைமொழி கொடுத்துள்ளார். 'யாழினர்' என்ற சொல்லுக்கு அடைமொழி இல்லை. ஆதலால், அவர் என்ன கருத்துடன் அப்படிக் கூறியுள்ளார்?

"மிடற்றால் இசைத்து இன்னிசையோடு யாழை வாசிக்கும் வீணையர் ஒருபக்கமும், மிடற்றால் பாடாது யாழைமாத்திரம் வாசிக்கும் யாழினர் ஒருபக்கமும்," என்று பொருள் கொண்டால் அவருடைய உள்ளக்கருத்து இற்றெனத் தெரியும்.

மாணிக்கவாசகரும் யாழ் மிடற்றோடு சேர்ந்தபோது வீணை என்றும், மிடற்றோடு சேராதபோழ்து யாழ் என்றும் பெயர் பெறும் என்று கருதினார் என்பது அவர் வாக்காலேயே அறியக்கிடக்கின்றது. அதனைவிட்டு வேறு விதமாகப் பொருள் கொள்ளுவது பொருந்தாது.

சகோடயாழ் என்பது ச + கோடு + யாழ் = சமமான கோட்டை (தண்டை) உடைய யாழ். அதாவது, வணர்—என்ற உறுப்பு இல்லாமல் பதினேழு உறுப்புக்களைக் கொண்டது என்று பொருளாகும்.

யாழ் என்னும் கருவியில வணர் என்ற உறுப்பு மாத்திரம் தான் வளைந்தது. வளைவுடன்கூடிய கோடு (தண்டு) எல்லா யாழுக்கும் உண்டு. வளைவு இல்லாத கோட்டையுடையது சகோடயாழ். சகோடயாழ் என்னும் சொல் இடுகுறிப்பெயர் அல்ல.

இத்தகைய அரிய, பெரிய பொருள்களைத் தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டி, நம்முடைய நாட்டில் பன்னெடுங் காலத்துக்கு முன்பு இருந்து வழங்கிவந்த செங்கோட்டியாழே தற்காலம் வீணை என்று வழங்குகிறதென்று உறுதிப்படுத்திய நண்பர், ஆ. அ. வரகுணபாண்டியருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி உரித்தாகுக. இத்தகைய இன்னும் பல இசைநூல்களை இயற்றி அவர் நீடூழி வாழ்வாராக.

"வாழ்க!" என்றாள்

[முத்தமிழ்மணி]

1. வானமெனும் பெருநீல வாடை தன்னில்
வைரங்கள் தெளித்தாற்போல் மின்னிப் பின்னும்
ஆனபெரு இருளிடையே முல்லை யைப்போல்
அழகுதமிழ்ப் புன்னகையால் என்னை ஈர்த்த
ஊனமிலாத் தாரகைகள் தன்னில் நாட்டம்
ஊன்றிடவே ஊணுறக்கம் மறந்தே மண்மேல்
மானமிலாச் சிறுவாழ்வு வாழும் மக்கள்,
மஞ்சுதமிழ் இழிநிலையை எண்ணிச் சாய்ந்தேன்.

2. அங்கமெலாம் திங்களொளிப் பிழம்பில் தோய்ந்தே
அயர்வெல்லாம் நீக்கிட்ட தானா லுள்ளம்
கங்குலிலே தங்குமிருள் தாங்கி வையம்
கவிந்திருக்கும் இருள்நோக்கி, நமது நாட்டில்
சிங்காரப் பதுமைகளாய் வாழும் சில்லோர்
செயல்நோக்கிச், சிறுமதியை நோக்கி, மற்றும்
சங்கமணிச் செல்வங்கள் தவழ்ந்த நாட்டின்
தலைவிதியை நோக்கியுளம் தளர்ந்தேன் சற்றே.

3. "அறமென்றும் திறமென்றும் ஆண்மை யென்றும்
அருளார்வம் முறைகோடா முறையீ தென்றும்
புறமென்றும் அகமென்றும் புலர்த்தும் பான்மை
பொருந்திட்ட தமிழ்நூற்கள் மலிந்த நாட்டில்,
'திறமுண்டு அவை கற்கத் திண்மையுண்டு
செயலளவில் அவைசேர்க்கும் செம்மை யுள்ளம்
பெறவில்லை' என்றேதம் மார்பு தட்டும்
பெட்பினராய்த் தமிழ்மக்கள் வாழ்கின் றார்கள்."

4. என்றிசைத்த குயில்மொழியின் ஒலியை நோக்கி,
இருள்நீக்கி ஒளியுடனே காட்சி தந்த
மென்றுகிலாள் முகம்நோக்கிக் கரங்கு வித்தேன்.
மேவியவண் போந்ததமிழ் வடிவைச் சார்ந்தே,
"நன்றுரைத்தாய் தமிழகத்தின் நிலையை," என்றேன்
"நனியுண்டு இதுவென்ன; நாட்டமில்லாக்
குன்றுகளாய்த் தமிழர்சிலர் குலவு கின்றார்
குணமில்லை; பணமுண்டு அவர்பால்," என்றாள்.

5. "காலமெலாம் எனைப்பேணும் கருத்துண் டென்றே
கரையாது பொய்பலவு முரைத்துத் தங்கள்
ஏலமிடும் பொருளாக்கி என்னை வாட்டும்
இழிபணியில் துணிந்திட்டார்; அன்னார் நாளும்

ஓலமிடும் குரல்கேட்டு உண்மை யோரா
தொருசிலரும் அவர்பணியைப் போற்று கின்றார்;
ஞாலமெலாம் என்புகழைப் பரப்பும் உண்மை
நாட்டமுளோர் மருந்துக்கும் நாட்டி லில்லை.

6. "எட்டளவில் என்பெருமை நாட்டி விட்டார்
எழிற்சங்கப் புலவர்பலர்; வாழ்த்து கின்றேன்.
பாட்டுருவில் என்புகழைப் பரப்பி வாழும்
பைந்தமிழர் நிலைவறுமை எக்கா லுந்தான்.
ஆட்டமுடன் பாட்டிசைத்துக் கூத்த டித்து
ஆரியத்தை அதிற்புகுத்திச் செல்வம் சேர்க்கும்
வேட்டைபொரு ளாயென்னை மதிக்கும் வீணர்
வீழவில்லை; வீழ்நாளென் வாழ்நா ளாகும்.

7. "வாள்தாங்கி எனைக்காத்து வாகை மாலை
வண்மையுடன் சூட்டியுளம் மகிழ்ந்த நாட்டில்,
ஆள்இல்லை எனைக்காக்க; ஆண்மை இல்லை;
அறிவில்லை; திறனில்லை; ஆயும் பண்பும்,
தோள் இல்லை; உடன்வரவோ துணிவு மில்லை;
தோய்ந்ததமிழ் உயர்வுள்ளம் துளியு மில்லை;
நாள்எண்ணிக் கழிக்கின்ற நிலைமைக் கேநான்
நண்ணிவிட்டேன்; நலிந்திட்டேன்," என்றாள் மேலும்.

8. "வெளிப்பகட்டால் எனைப்புரக்கும் கள்ளர் சில்லோர்
வீணுரைக ளாடுகிறார்; மலர்ச்சி வேண்டிக்
களிப்புடனே சிலமைந்தர் கடமை யுன்னிக்
காலமெலாம் என்நலத்துக் குழைத்திட் டாலும்,
'ஒளிப்பதிவு சரி;ஆனால் அவர்மேற் கொண்ட
ஒண்பொருள்தான் சரியில்லை,' என்றே நாட்டில்
விளிப்பதுவே குறிக்கோளாய்க் கொண்ட வீணர்
வீழவில்லை; வீழ்நாளென் வாழ்நா ளாகும்.

9. "நிலையில்லை என்வாழ்க்கை என்று சாற்றி
நீணிலத்தில் ஆணவத்தால் தங்கள் சூழ்ச்சி
வலைதன்னி லெனைப்பிணித்தார் வாய்வீச் சாளர்;
வன்மையிலாச் சூரரெலாம் வீழ்நாள் யானும்
உலைவின்றி நம்நாட்டில் வாழ்நாள்," என்றாள்;
உளம்நைந்தாள்; உறுதியிலா துகுத்தாள் கண்ணீர்.
சிலையன்னாள் அடிபற்றி, "தீமை யாளர்
சீரழிவார்," என்றேன். "நீ வாழ்க" என்றாள்.

நான் கண்ட பெருந்தமிழன்

[மயிலை, சீனி. வேங்கடசாமி]

தமிழறிஞர் உலகத்திலே, பல்லாவரம் என்றால் மறைமலை அடிகள் என்றும், மறைமலை அடிகள் என்றால் பல்லாவரம் என்றும் எண்ணம் உண்டாவது மரபு. பல்லாவரத்திற்குச் சென்று மறைமலை அடிகளைக் கண்டு அவருடன் அளவளாவித் திரும்பி வரும்போது, ஒரு புனிதமான இடத்திற்கு யாத்திரை சென்று வழிபட்டு மன அமைதியோடு திரும்பி வருவதுபோன்ற உணர்ச்சி எனக்கு ஏற்படுவது உண்டு. இதன் காரணம் யாது? சமயப் பற்றா? அன்று. சாத்திரப் பற்றா? அதுவும் அன்று. பின்னை எனை எனின், அப்பெரியாரிடத்தில், அவரது பேச்சிலும் எழுத்திலும் காணப்பட்ட தூய தனித்தமிழ்! கலப்பற்ற நல்ல இனிய தமிழ்! அடிகளார் பேசும் மெல்லிய இனிய அழகிய தமிழைக் கேட்கும்போது, அவரது கலப்பற்ற தூய தமிழைச் செவிமடுக்கும்போது, உள்ளத்தில் வியப்பும் மகிழ்ச்சியும உணர்ச்சியும் பெருகும். நாமும் தனித்தமிழ் பேசவேண்டும் என்னும் ஊக்கம் பிறக்கும். அடிகளார் இயற்றிய நூல்களைப் படிக்குந்தோறும் இவ்வித உணர்ச்சிகளே உண்டாகின்றன. மறைமலையைக் கண்டு அளவளாவியது எனது வாழ்நாட்களில் ஐந்து தடவை மட்டுந்தான். (அடிகளார் சொற்பொழிவுகளைப் பலமுறை கேட்டு அவரது "செந்தமிழால் செவி கழுவி" யுள்ளேன்.) ஒவ்வொரு தடவையும், அடிகளாரிடம் குடி கொண்டிருந்த தூய தனித்தமிழ், அவரிடம் பெருமதிப்புக் கொள்ளச்செய்தது. அவரைப்பற்றி நினைக்கும்போதெல்லாம், அடிகள் ஒரு பெருந்தமிழன் என்று என் உள்ளம் சொல்லிக்

சில ஆண்டுகளுக்கு முன்னர், பல்லாவரத்தில், அடிகளார் மாளிகையில், பொதுநிலைக் கழக விழா நடைபெற்றது. அடிகளார் தலைமை தாங்கினார்கள். பல பேச்சாளர்களுள் திரு. மறை. திருநாவுக்கரசு அவர்களும் ஒருவர். திருநாவுக்கரசு அவர்கள், தமது சொற்பொழிவில், உரிமையோடு அடிகளாரைப்பற்றிச் சில கூறினார்கள். அவற்றில், "அடிகளார் மிக்க கெர்வமுடையவர்," என்பதும் ஒன்று. உடனே, தலைமை தாங்கிய அடிகளார் மலர்ந்த முகத்துடன் "கர்வம் என்று சொல்லாதே இறுமாப்பு என்று சொல்," என்று திருத்தினார்கள். தம்மைக் குறைகூறுவதாக இருந்தாலும் அதனைத் தூய —மி:

தமிழிலே கூறவேண்டும் என்பது அத்தமிழ்ப் பெரியாரின் தனிமாண்பு. "பைந்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் பெருமான்" என்று ஒரு பெரியார் தமது வழிபடு கடவுளைப் பற்றிக் கூறியது அவ்வமயம் நினைவுக்கு வந்தது.

தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்து, அதனைத் தமது வாழ்நாள் வரையில் பேச்சிலும் எழுத்திலும் வாழ்க்கையிலும் இடைவிடாது நிறைவேற்றிய பெருந்தமிழன் மறைமலையடிகளாரின் பருவுடல் மறைந்துவிட்டது. ஆனால், அவரது புகழுடம்பு தமிழ் நாடெங்கும் தமிழ்க் காற்றுடன் கலந்து வீசுகிறது. வாழ்க அவர் புகழ்.

மறைமலையடிகளின் அமைதியான தோற்றமும், இனிய குரலும், தனித்தமிழ் பேச்சும் எமது மனத்தை விட்டகலா. அவரை நினைக்கும்போதெல்லாம் என் மனம், அடிகள் ஒரு ழன் என்று கூறுகிறது.

பொன்மொழிகள்

மக்கள் உயிரின்நிலை அறிவும் உணர்வும் என இருதிறப் படும். அறிவைப் பார்க்கிலும் உணர்வே சிறந்தது. அறிவு உருவத்தைப்பற்றி நிகழும்; உணர்வு அஃதின்றியும் நிகழும்.

இறைவன் உண்டென்று மட்டும் ஆராய்ந்தறிதல் அறிவின் பயன். அவனொடொருமித்துப் பேரின்பத் தழுந்தல் உணர் வின் பயன். அறிவுக்கு விளங்காத இறைவன் அன்பாற் கரைந்துருகித் தேம்பும் அன்பர் உணர்வுக்கு விளங்கித் தோன்றி அருள்புரிவன். ஆகலின், அவற்கு உருவமுண்டென்பதொரு தலையாம்.

விரிந்த மன இருளை நீக்குவது சுருங்கிய அறிவொளியே யாம். எளிது விளக்குதற்கன்றே. எல்லாம் வல்ல இறைவன் ஞாயிறு என்று சொல்லப்படும் ஒரு சிறு பொற்குடத்தே ஒளியாகிய அமிழ்தத்தை நிரப்பி அதனை வான்மேற்றாக்க, அதனுட் பொதிந்த அவ்வமிழ்தக் கதிர்கள் விரிந்த இருண்மேற் பல்லாயிரங் கணைகள்போற் பாய்ந்து அவற்றைச் சின்ன பின்னமா யழித்து நமக்குக் கட்புலனை விளக்கி மனவறிவையும் ஓங்கச்செய்கின்றது.

—மறைமலையடிகள்.

மறைமலையடிகள்

'செய்தித்தாட் குறிப்புக்கள்'

பன்மொழிப் புலவராய், மும்மொழித் திலகமாய் அடிகள் ஆற்றிய அரும்பெரும் அறிவுத்தொண்டினை இனி யாரே ஈடு செய்யவல்லார்? வஞ்சகர்களுக்கும் வாயடைக்க ஆய்வுரை கூறும் வளமார்ந்த நெஞ்சுரம் படைத்த ஏந்தல் இன்குரல் ஓசையினைத் தமிழுலகம் இழந்தேவிட்டது!

"தாறள்மலர்"

பொதிகைமலையைப்போல மறைமலையும் என்றும் மறையாத மாமலையாக இருந்துவரும் என்று எண்ணியிருந்தோம். "மக்கள் நூறு ஆண்டு உயிர்வாழ்வது எப்படி?" என்னும் நூலை எழுதிய மறைமலையடிகள்,—சுவாமி வேதாசலம் அவர்கள்—நூறாண்டு வாழ்ந்து, ஆயிரமாயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்கக் கூடிய தமிழ்ப்பணிகளைப் புரிந்துவருவார் என்று நம்பியிருந்தோம். அசலம் என்றும், மலை என்றும் அந்தப் பெரியாரின் பெயரிலேயே இருந்தபடியால், அவருக்கு என்றும் மறைவில்லையென்றே எண்ணி இறுமாந்திருந்தோம். பாவி யமன் நம்மிடம் மறக் கருணைகாட்டி ஏமாற்றிவிட்டான்.

சுவாமிகளின் குரல் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. வண்டுகளின் ரீங்காரத்தை யொத்து இனிமைமிக்க உச்சஸ்தாயியில் நெடுந்தூரம் தெளிவாகக் கேட்கக்கூடியது. அடிகளின் சொல்லாற்றலோ மிகச் சிறந்தது. தமிழில் பல பொருள்களைப்பற்றியும் புலமை வாய்ந்த சொற்பொழிவுகளை எப்படி நிகழ்த்த வேண்டுமென்பதற்கு மறைத்திரு மறைமலையடிகளார் செவ்விய வழி வகுத்து அளித்தவர்.

"கல்கி"

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளாக, தமிழ்மொழியாக்கத்துக்காகவும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகவும், மனித வாழ்க்கையையொட்டி, சைவசித்தாந்த தத்துவத்தைப் பரப்புவதற்காகவும், சாதி சமய சழக்குகளை அறுத்து, தமிழர் சமுதாயத்தை உலகிலுள்ள மற்ற சமுதாயங்களுக்குச் சரிசமமாக வைப்பதற்காக அடிகளார் ஆற்றியுள்ள அனந்தமான அரும்பெருந் தொண்டுகளை எண்ணிப் பார்க்கும்போது, அவர்கள் உயிர்நீத்த நாள் 'கலைமகள் கலன் இழந்த நாள்,' 'தமிழ் மகள் நாதியற்ற நாள்' என்றுமே கருதிப் புலம்பத் தோன்றுகிறது.

"பிரசண்ட விகடன்"

தமிழரது சமய வாழ்வுக்கும், மொழி முன்னேற்றத்திற்கும எல்லையாய் நின்ற இப்பெரியார் 'இந்தியால் தமிழுக்கு இழுக்கே' என்று முடிவுகட்டி எழுதியும், பேசியும் துணிந்துநின்ற நிலை தமிழர் உள்ளத்தைவிட்டு அகலாது.. தமிழுக்கு வரம்பாய புலவர் பலரைத் தோற்றுவித்த தொல்லாசிரியராயும், தனித் தமிழ்நடையே நன்னடையென்று நிலைநிறுவிய நல்லாசிரியராயும் விளங்கிய அடிகளார், பல்லாவரத்தில் தம் இல்லமாகிய பொது நிலைக் கழக மாளிகையில் சொந்தமாகவே அச்சகம் நிறுவி, உலகம் என்றும் உச்சிமேற்கொண்டு மெச்சத்தக்க நூல்கள் பலவற்றை வெளியிட்டு உலவுமாறு செய்த ஆற்றலை, தமிழ்நாடு மறக்குநாள் உளதோ? "தமிழ்த்தென்றல்"

அஸ்ஸாம் பூகம்பச் செய்திகள் அகில இந்தியாவை நிலை குலையச் செய்திருக்கின்றன. மறைமலையடிகளின் மரணச செய்தியோ தமிழ்நாட்டை மீளாத்துயரத்தில் மூழ்கடித்துவிட்டது. பூகம்ப இடிபாடுகளைச் செப்பனிட்டுச் சீராக்கிக்கொள்ள லாம். இடிந்த கட்டிடங்களுக்குப் பதிலாகப் புதுக்கட்டிடங் களை முன்னைவிட அழகாகக் கட்டிவிடலாம். கரைபுரண்டு ஓடும் பிரம்மபுத்திராநதியின் வெள்ளத்தை இஞ்சினியர்கள் தடுத்து நிறுத்திவிடுவார்கள். ஆனால், மறைந்த மறைமலையடிகளை உயிர்ப்பிக்க யாரிருக்கிறார்கள்? அவர் மறைவைக் கேட்டுப் பெருக்கெடுக்கும் தமிழ்மக்களின் கண்ணீரை நிறுத்த எந்த இஞ்சினியர்களால் முடியும்? "காஞ்சி"

மறைமலையடிகளாரது பெருமையை மதியாதவர் யாரும் இருக்கமுடியாது. ஆனால், அதனை அளந்தறிவது நமக்கு அரிது. ஏனெனில், இன்று நாம் பேசும் தமிழ், எழுதும் தமிழ் அவர் நமக்குத் தந்த தமிழ். நம் தமிழறிவு, நம் தமிழ்ப்பற்று, நம் தமிழின எழுச்சியாவும் அவர் நமக்குத் தந்த தமிழறிவும், தமிழ்ப்பற்றும், தமிழின எழுச்சியுமே. நம்மிடையேயுள்ள பெரியார், அறிஞர், கலைஞர் எழுத்தாளர், தமிழ்ப்பற்றுளர் யாவரும் அத்தமிழ் மலையிலிருந்து பிறந்து வளர்ந்த பேராறு களும் சிற்றாறுகளுமே.

மறைமலையடிகள் தம் வாழ்நாளிலேயே தமிழுக்கு ஒரு உரைகல்லாகத் தமிழரால் போட்டியின்றி ஏற்றுக்கொள்ளப் பட்டவர். மறைமலையடிகளார் இல்லத்தில் சிலநாள் பயின்று விட்டேன் என்று ஒருவன் கூறினால் போதும், புலவர் மன்றங்கள் எதிலும் அதற்கு மேற்பட்ட நற்சான்றை எவரும் கோர மாட்டார்! "பொன்னி"

பணிமதி!

[வித்துவான், முதுகண்ணன், புதுவை.]

பெருங்கடலாய் அலைபெண்ணே! பெருமுழக்கம் விளைக்கின்றாய்!
இருநிலத்தில் உனக்குற்ற இருந்துயரம் எதுவோ? சொல்!
கரையிடத்தில் வருகின்றாய்! கலங்கிப்பின் கடக்கின்றாய்!
விரையாமல் விளக்கிடுக; வெருவாது கடற்பெண்ணே!

தமிழர்தம் பெரும்பேற்றைத், தமிழ்த்தாயின் சிறப்பணியைத்
தமிழர்பால் கவர்ந்தனையே! தணிவதுமுன் துயராமோ?
பலர்கூடும் கழகத்தைப், பனித்தமிழர் அரும்பொருளை
அலைத்தேநீ கவர்ந்தனையே! அவ்வினைதான் அமைவுறுமோ?

சுடர்முடியைத் துறந்துயர்ந்த துறவறமாம் நெறியமைந்த,
அடர்புலமை நலந்திகழ்ந்த அரசிளங்கோ அடிகளவர்,
உளம்வெதும்பிக் கொடுங்கடலென் றுரைத்தசொலை அடாச்செயலாய்
அளக்கர்நீ அடைந்தனையே! அவருரையும் பழுதாமோ?

தமிழ்ப்புலவர் உளம்நோவத் தமிழினிமை அடைந்திடமுத்
தமிழ்ச்சுவடி கவர்ந்தனையே! தமிழ்ப்புலவர் விடுவாரோ?
தமிழ்ப்புலவர் மனம்நொந்து தணியாத கொடுமொழியால்
இமிழ்கடலே தவிக்கின்றாய் இனிஅதுதான் பழுதுறுமோ?

எனவாங்கு

உயர்புலப் புலவரை உணர்ந்துநீ அவரிடம்
துயர்களை வழிபெறப் பணிமதி!
அயர்வறச் செருக்கற அலைதரும் கடலே!

அரவிந்தர் மறைவு

உலகத்தில் தோன்றும் மக்களுள் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயரிய கொள்கையைக் கடைப்பிடித் தொழுகுவோர் சிலர்; அவரே செயற்கரிய செய்யும் பெரியோராவர்; அவர்களில் வைத்தெண்ணத்தக் காரே 'அரவிந்த கோஷ்' என்னும் அரவிந்தராவர்.

இவர் 1872-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் கரு-ஆம் நாள் கல்கத்தாவில் தோன்றினார். தமது ஏழாவது அகவையிலேயே தம் இரு தமயன்மாருடன் கல்விகற்க இங்கிலாந்து சென்றார். அங்குப் பதினான்கு ஆண்டுகள் தங்கி, கேம்பிரிட்சிலுள்ள மன்னர் கல்லூரியிற் கல்வி பயின்றார். 1890-ல் ஐ. சி. எஸ்.பட்டத்திற்கான புகுமுகம் புகு (பிரவேச) தேர்வில் தேறினார். அதன்பின் அவர்க்குப் படிப்பில் விருப்பமில்லை ஆகலான், இறுதித் தேர்வில் தேறவில்லை. பின்னர் 1893-ல் தாய் நாட்டுக்குத் திரும்பி வரலானார். வந்தபின் பரோடா தனியரசு நாட்டில் ஒரு உயர்நிலை அதிகாரியாகப் பதின்மூன்று ஆண்டுகள் பணிபுரிந்தார். பின், வங்க தேசியக் கல்லூரியின் தலைவராக அமர 1906-ல் கல்கத்தாவுக்குச் சென்றார். சென்று அவ் அலுவலை ஏற்ற சிறிது காலத்துக்குள் அரசியல் விடுதலை இயக்கம் அவர் மனத்தைப் பெரிதும் ஈர்த்தது; அதுகாலை வங்கப் பிரிவினை முகிழ்த்தது; அதை எதிர்த்தார்; போரிட்டார்; அதில் பெரிதும் முனைந்துநின்றார். "வந்தே மாதரம்" என்னும் புதினத்தாளின் முதன் முதல் ஆசிரியக் கிழமை பூண்டு தொண்டாற்றி, ஆங்கு வீறிட்டெழுந்தவர் அரவிந்தரே!

பின்னர் அலிப்பூரில் வெடிகுண்டு நிகழ்ச்சி நடந்தது; அந்நிகழ்ச்சி வழக்கில் இவர் முதன்முதலாக அரசினரால் குற்றவாளியெனக் கொண்டு கைது செய்து தனி அறை ஒன்றில் சிறைப்படுத்தினர். அச் சிறையில் வாழ்ந்த நாளில் இரவு பகலாக ஓய்வின்றிக் கீதை, உபநிடதங்களைக் கற்றார். அவைகளின் நுண் பொருள் உணர்ந்தார்; உணர்ந்ததன் பயனாக இறையன்பும், மன வொருமைக் காட்சியும் (யோகமும்) ஆங்கேயே கைகூடின; அங்கேயே துறவோரானார்; பொன்றாப் புகழ் பெறும் அறவோராம் நிலையெய்தினார்.

அதன் பின்னர், தேசபந்து சித்தரஞ்சனதாசர், முறைமன்றில் இவர் சார்பில் வழக்குகளை ஆய்ந்து வாதாடி இவரை விடுதலைபெறச் செய்தார். விடுதலை பெற்றபின் இவர் ஆங்கிலத்தில் 'கர்மயோகி' என்றும், வங்காளி மொழியில் 'தர்மா' என்றும் இரு கிழமைப் புதினத்தாள்களைத் துவங்கி நடத்திவந்தார். அப்பால் அரசியலார் தம்மைச் சிறைப்படுத்த எண்ணுவதாக அறிந்து கல்கத்தாவுக்கு அண்மையிலுள்ள சந்திரநாகூர் என்னும் பிரெஞ்சினர் ஆட்சியுள்ள நகருக்குச் சென்றார். பின்னர் 1910-ஆம் ஆண்டில் புதுச்சேரி நகருக்குப் போந்து குடியேறித் தம் அற நிலையத்தை நிறுவினார். அதிலிருந்து அவர் அறவோராக வாழ்ந்தனர். அங்கிருந்துகொண்டு அவர் பல்வகை இலக்கியப்பணி புரிந்தார்; இறை இன்பநெறியை உணர்த்தினார்.

இத்தகையராம் மகான் அரவிந்தரவர்கள் இத் திசம்பர்த் திங்கள் ச-ஆம் நாள் இரவு 1-30 மணிக்கு இறைவன் திருவடி நீழலிற் கலந்தார்.

அண்மையில் இறையடி நீழலிற்கலந்த திருவண்ணாமலை ரமண முனிவர் பெரும் பிரிவு நீத்து யாங்கொண்ட துயர் ஆறாதிருக்கும் இக்காலை, இவர் பிரிவும் மிகமிக வருத்தலுறுகின்றது ஆகலான், யாம் ஆழ்ந்த துயரினையடைகின்றோம். அன்னார் இருவரின் நல்லுயிர்களும் இறையடி இன்பிற் கலப்பனவாக.

—செல்லூர்க்கிழார்.

செய்திகளும் குறிப்புக்களும்

இரண்டு நூறாயிரம் அருட்கொடை

திருநெல்வேலி 'மணிமுத்தாநதி அணைத்திட்டம்' அம் மாவட்டத்து வாழும் பெருமக்கள் வழங்கிய பெரும்பொருள் துணைகொண்டு அரசியலாரால் துவங்கப்பெற்று நிகழ்ந்து வருகின்றது. அச்சீரியபணிக்குத் திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானத்தின் அருட்கொடையாக வெண்பொன் இரண்டு நூறாயிரம் வழங்கப்பெற்றமை போற்றத்தக்க பேரறமேயாகும். சைவசித்தாந்தத் திருமடத்துப் பெருமுதல்வர்கள் அருள்வழி நடைகொள்வரேல் பொருள் மழையும் பொழிவரென்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டாகும். இதுவே அளத்தற்கரிய வளமுடைப் பேரறமாமென்பது,

"நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம விவண் தட்டோரே" (புறநானூறு கஅ)

என்னும் பொருண்மொழியால் வலியுறும்.

திருக்குறள் வகுப்பு மாணவர் கழகச் சிறப்புக்கூட்டமும், புதுவயல் புலவர்மணி சோமசுந்தரஞ் செட்டியார் அவர்களுக்கு ஆதீன வித்துவான் என்ற பட்டமும், திருவண்ணாமலை ஆதீன ஐந்து கோவில் தேவத்தான நூல்நிலையத் திறப்பும், ஆதீனத்துக்குரிய சதுர்வேதிமங்கலத் திருக்கோவிலில் திருவுருவ நிலைநாட்டலும் திருமுழுக்கும் முறையே தக்கார் தலைமையிலும் பெரும்புலவர் விரிவுரையிலும் பெருமக்கள் பெரிதும் ஈடுற நிகழ்ந்தமை உணர்ந்து மகிழ்கின்றோம்.

தாய்மொழி பேணும் தனிமாண்பு

துருக்கி நாட்டின் பல்கலைக் கல்லூரியின் கலைகளையும், சமயம், தத்துவம், வேதாந்த முதலிய நுண்ணுணர் நூல்களையும் கற்கவரும் இந்திய மாணவர்க்குத் திங்கள் ஒன்றுக்கு இருநூறு ரூபா விழுக்காடு ஆண்டு இரண்டுக்கு அந்நாட்டரசியலாரால் வழங்கப்படுமென்று வெளிப்படுத்தியுள்ளனர். இதுபோல் நம் தாய்மொழியாம் செந்தமிழ் மொழிக்கும் வழங்கப்பெறும் வண்மைமிக்க நன்மைக்காலத்தை எதிர்நோக்குவோமாக.

அனைத்திந்திய பெண்கள் சங்க சென்னைக் கிளையின் வேண்டுகோள்

இம்மாதம் 2-ம் நாள் அனைத்திந்திய பெண்கள் சங்கத்தின் சென்னைக் கிளை ஆதரவில் இராஜாஜி மன்றத்தில் மாநாடு நடைபெற்றது. அப்போழ்து பவநகர் மகாராணியார் தலைமை வகித்தார்கள். பெண்கள் சமூகத்துக்கு உற்ற பயன் விளைக்கும் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டுள்ளன. அவைகளுள், திரைப்படங்களில் கொலை, தூக்கிலிடுதல், சுடுதல் இன்னும் பிற பெண்களை அவமதிக்கும் காட்சிகளைக் காண்பிப்பதைத் திரைப்படத் தணிக்கைக் குழுவினர் தடுத்தல் வேண்டுமென்றும், அன்றியும், எல்லாச் செய்தித்தாள்களிலும் அருவருக்கத்தக்க வகையில் படங்களையும், கதைகளையும் பிரசுரிப்பதை முற்றிலும் அகற்றப்படவேண்டுமென்றும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மதிப்புரை

மின்னொளி :

[ஆசிரியர் : ப. கண்ணன் அவர்கள், தென்றல் நூற்பதிப்புக்கழகம், சலகண்டபுரம், சேலம் மாவட்டம் வெளியீடு. விலை அணா 6.]

திரு. ஆசிரியரவர்கள் நாட்டுப்புறத்துள்ள பொருந்தா ஒழுக்கங்களைப் போக்கவும், பொருந்திய மருந்தனையதிருந்தும் ஒழுக்கங்களை ஆக்கவும் துணைசெய்ய ஊக்கமளிக்கும் ஓர் உயரிய சீர்திருத்த நாடகமுறையில் இந் நூலை ஆக்கியுள்ளார். அவர் கருத்து நிரம்புவதற்கு ஏற்ற நூலென்பது துணிபு. தமிழ்நாடு இதனால் நலம்பெறுமாக.

தமிழன் கண்ட மலேயா :

[ஆசிரியர்: அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் B.O.L., M. Litt., துணைத் தமிழ்ப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை. தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை 10. வெளியீடு விலை ரூபா 2-0-0.]

திரு. ஆசிரியரவர்கள் மலேயாவின் கண்ணுள்ள தமிழ்ப்பண்ணையார் வேண்டுகோளுக்கிணங்கி, 21-5-48-இல் அவ்வூர்க்குச் சென்றிருந்தார்கள். அவ்வூர் தமிழ்ப்பெருமக்கள் மிகுந்துவாழும் ஒரு சிறந்த நகர். அங்கு ஒரு திங்கள்வரைத் தங்கியிருந்தார்கள். ஆங்காங்குள்ள பல ஊர்களிலும் தமிழ்ப் பணியாம் பல விரிவுரை ஆற்றியுள்ளார்கள். தாம் கண்டதும் கேட்டதும், ஊர் இயல்பும், மக்கள் பழக்கவழக்க நாகரிகப் பண்புகளும், தமிழ்க்கல்லூரி, ஆசிரிய மாணவர் தொகைகள், பள்ளிக்கூடம் நிகழும் பலவேறு ஊர்கள், நாட்டியலிற்காணும் நற்றமிழ்ப்பற்று முதலியவற்றைத் தெளிய விளக்கி யுள்ளார்கள்.

மேலும், நூல் விளக்கங்களைத் தம் அருமை மகளார்க்கு விடுக்கும் கடித முறையில் அமைத்திருப்பது சாலச்சிறந்ததேயாம். இந்நூலைக் கற்பார் செவ்வியமுறையில் கடிதம் எழுதவும் துணைபுரியும் வாய்ப்பாகவுள்ள நல்ல பதிப்பு. ஒழுகிய நடையும், இனிமை, எளிமை, தெளிவு, திட்பநுட்பச் செறிவும் திகழ்ந்து விளங்குவது. கல்லூரி மாணவர்கள் கற்றுப் பயனடையக் கூடியது. தமிழ்நாடு போற்றுமாக.

தமிழ்த்தென்றல் ஆண்டு மலர் :

[ஆசிரியர் : வெ. வ. இராமசாமி, கிடைக்குமிடம் : தமிழ்த்தென்றல் சரியாலயம், விருதுநகர். விலை குறிப்பிடப்படவில்லை.]

1950-ம் ஆண்டுமலர் வரப்பெற்றோம். கண்கவர் அட்டைப்படமும் கருத்தை விளக்கும் வேறுபல படங்களும் அம்மலரை மிளிரச்செய்கின்றன. பேராசிரியர் : திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் முதலிய அறிவாற்றல் செறிந்த பல நல்லறிஞர்களின் கட்டுரைகள் நாட்டுக்கும் மொழிக்கும் நன்மைபயக்கும் தன்மையில் விளங்குகின்றன. இம்மலர் தமிழ்த்தாய்க்கோர் அணிகலமாகும்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2/140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : வ. சுப்பையா.